திராவிடநாடு

20-9-59 | வார வெளியீடு | விலை 16 காசு

# இதுவா சுதந்திரம்?

—[எழிலோவியம் பரமசிவம்]—

இதுவா சுதந்திரம்?—நாட்டில்
ஏழ்மையும் பிணியும் எக்காளம் போடுதே! (இது)

பதர்போல மக்கள் வாழ்வதோ?—தினம்
பட்டினி கிடந்தே சாவதோ? (இது)

சுதந்திரக் கொடிஉயர் வானிலே ஆடுது!
சோர்வாலும் பசியாலும் ஏழைவயிறு வாடுது!
பதவி அமைச்சர் பவனிகள் பெருகுது!
பாதையோர மக்கள்நிலை பார்க்கமனம் உருகுது! (இது)

வாடுபவர் உணவின்றி வாடியே வீழ்கின்றார்!
வகையாய் உண்பவர், உண்டுண்டே வாழ்கின்றார்!
பாடுபடும் ஏழைகள் பலனின்றி நோவதோ?
பாடுபடா திருப்போர் பலன்பெற்று வாழ்வதோ (இது)

வாழ்ந்தவர் நாளும் வாழ்ந்தே வருகின்றார்!
வறுமையால் தாழ்ந்தவர் வாழ்விழந்தே போகின்றார்!
ஆழ்ந்த செல்வந்தர் அதிசெல்வ ராகின்றார்!
அதற்கொரு வழிவகை யார்தான் செய்கின்றார்? (இது)

மாடியோ மேன்மேலும் மாடியாய் உயருது!
மண்குடிலோ மென்மேலும் மக்கியே இடியுது!
மாடியும் குடிசையும்சம மாவதன்றோ சுதந்திரம்?
மகிழ்ச்சியொடு மகிழ்ச்சி சேர்ந்தாலன்றோ இதந்தரும்? (இது)

எதுவோ சுதந்திரம்? ஏழ்மையா சுதந்திரம்?
இதுவோ சுதந்திரம்? இழிநிலையா சுதந்திரம்?
உதவாது ஆட்சி உங்களுக்கு உதவாது!
ஊராளும் தகுதியே உங்களுக்குப் போதாது! (இது)

# மணப்பாடும் மக்கள் நிலையும்

—(சிறுவன்)—

திருநெல்வேலிக்குத் தென் கிழக்கே அமைந்துள்ள மணப்பாடு எனப் பெயர் பெற்ற இச்சிற்றூரில் மணலுக்குப் பஞ்சமெனத் தஞ்சமடையவேண்டியதில்லை. கடலைத் தோண்டி ஒருபுறம் மணல் மேடாகவே குவித்திருப்பார்களோ என ஐயுறும் வகையில் காணப்படுவது அச்சிற்றூர். இம் மணல்மேட்டை நல்ல இடமெனக் கருதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது வெள்ளையர்கள் அதன்மேல் கலங்கரைவிளக்கமொன்றை கருத்துடன் கட்டியிருக்கின்றனர். காலத்தால் மாறுபடாது கண்ணும் கருத்துமாய்க் காக்கப்படுவது இக் கலங்கரை விளக்கம் மட்டும்தான்.

கடல் தன் காலைத் தழுவிச்செல்லும் வண்ணம் மேட்டில் அலட்சியமாய் அமைந்திருக்கிறது இவ்வூர். "சின்னக் கொழும்பு" எனச்செல்லமாக அழைக்கப்படும் இச் சிற்றூர் சீரழிந்து காணப்படுவது ஆட்சியாளர்களின் கண்ணில் படாதது ஏனோ? "காலைத் தழுவிச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்திலா நீ அமைந்துள்ளாய். உன் உடலையே வேரோடு அழித்துக்காட்ட என்னிடம் வல்லமைஉண்டு" என வாய் வீரம் பேசாது செய்கையிலே காட்டுகிறது கடல். கரையோரத்தில் தன் அலையெனும் கரங்களை நீட்டி ஆர்ப்பரித்த கடல் ஊரிலும் உல்லாசமாய் உலவச் சென்று, கல்வீடு கட்டிக் கணக்காய் வாழும் குடும்பங்களை வீட்டோடுஇடித்துப் பாழாக்கி விரட்டும் கொடிய இக் காட்சி கோரத்திலும் கோரம்.

பாய்மரக்கலத்திலே பகல் இரவு பாராது கொந்தளிக்கும் ஆழ்கடலில் குடியிருக்கும் கயல்களைத் தன் சுண்டுவிரல் வலை வீச்சால் சுருட்டியிழுத்து அதன்பொருட்டு வயிறு வளர்க்கும் மீனவர்களின் நிலை மேன்மையுறுது பாழாக்குகிறது இக்கடல்.

கடலரிப்பால் வருடா வருடம் இரண்டு கல் தொலைவுக்குத் தங்களது விடுகளையும், நிலங்களையும், பொருள்களையும், இன்னபிறவற்றையும் இரையாகக் கொடுத்து ஏங்கி நிற்கின்றனர்கள் இம் மக்கள். தமிழ்நாட்டின் தென் கோடியில் கிடக்கும் மக்களைத் திண்டாடித் தெருவில் நிற்க விட்டு விட்டு, வடக்கே சென்று தென்னாட்டின் வளத்தை வாரியிறைத்துக் குதூகலம் பாடுகிறார்கள் எங்கள் இந்தியப்பிரியர்கள். இங்குள்ள மக்களை ஏதேதோ தாக்கங்கள் என எள்ளி நகையாடி அவ்வளவும் வெள்ளச் சேதத்திற்கு 5 கோடி எனச் சொல்லி ஆகாய விமானத்தில் பறக்கிறது சர்க்காரைப் புரு. வகுத்த திட்டத்தை வகையுடன் நிறைவேற்றத் தெரியாது திண்டாடும் இந்த ஆளவந்தார்கள் செய்த செயலில் நட்டம் எனக் காட்டும் ரூபாய் இலட்சக் கணக்கிலே.

நாட்டில் நாட்டமுடைய நாயகர்கள் நாங்கள்தான் என வீண் பறை சாற்றும் 'காங்கள்' இரயில்வே நிர்வாகத்திலும்; அஞ்சல் நிர்வாகத்திலும் பல ஆயிரம் நட்டம் என அறிவிப்பது ஏனோ தெரியவில்லை. இவர்களுக்குப் பெயர் நாடாளத் தெரிந்தவர் என்பது.

தென்னாட்டின் பணத்தைக் கொள்ளைகொண்டு வடக்கே இருக்கும் "ரூர்கேலா"வை உயர்த்தப் பார்க்கும் உத்தமர்கள் தென்னாட்டில் செய்வது யாதென்றால் கயிறு முறுக்கும் தொழிற்சாலையும், அப்பளத் தொழிற்சாலையும் என அப்பட்டமாக கூறுகிறார்கள் அவமானம் இல்லாமல். இவர்கள் இங்கு ஆரம்பித்த தொழிற்சாலையின் மிகுதி என்ன என எண்ணும் போது கிழவி செய்த வேலையைப் பறித்து அவள் வியாபாரத்தை—அரை வயிற்றுக் கஞ்சியையும் தடுத்ததுதான் மிச்சம். இதுதான் ஆளவந்தவர்கள் செய்த அபூர்வச் செயல்.

இதை எடுத்துக் காட்டித் தேயும் தெற்கினைப்பாரீர் என்றால், நமக்கு கிடைக்கும் நல்வாழ்த்துக்கள், பிச்சைக்காரர்கள் சாராயம் காய்ச்ச உதவுபவர்கள் என்ற வசை மொழிகளாகும். இவர்களுக்கு உண்மை விளங்கவேண்டுமாயின் தெற்கு நோக்கி வந்து சீரழிந்து காணப்படும் மணப்பாட்டைப் பார்க்கட்டும்.

## "கல் முதலாளி"

சென்னை. செப். 9—

"இந்நாட்டில் உயிருள்ள முதலாளிகளைவிட கல் முதலாளிகள் (கடவுள்) மூலம்தான் அரசாங்கத்துக்கு அதிக வருமானம் வருகிறது. பல கஷ்டங்களுக்கு--நிந்தனைகளுக்குட்பட்டு, முதலாளிகளிடமிருந்து அரசாங்கம் பணம் வசூலிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் கல் முதலாளிகளுக்கு வெகு சுலபமாக இலட்சக்கணக்கான பணம் கிடைக்கிறது ஆதலின் கல் முதலாளிகளை பராமரிப்பது சமுதாயத்தின் கடமை" என்று காங்கிரஸ் உறுப்பினர் திருமதி டி. என். அனந்தநாயகி இன்று சட்டசபையில் அறநிலையப்பாதுகாப்புமசோதாபற்றிய விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. பி எஸ். சின்னதுரை (பி. சோ.): ஆண்டவனை கல் முதலாளி என்று கூறுவதை நான் ஆட்சேபிக்கிறேன். கடவுளை ஏழைபங்காளன், ஏழைகளின் ஆதரவாளனாகக் கருதுபவன் நான். ஆதலின் முதலாளி என்று ஆண்டவனை குறிப்பிடுவது கோடிக் கணக்கான ஏழை பக்தர்களின் மனதைப் புண்படுத்துவதாகும்.

திரு. வி. கே. கோதண்டராமன் (கம்யூ): கடவுளை கல் முதலாளி என்று கூறுவது முற்றிலும் பொருத்தமே. உயிருள்ள முதலாளிகள் ஏழைகளின் பணத்தை சுரண்டுவது போல்; கடவுள்களும் ஏழை மக்களிடமிருந்துதான் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சுரண்டுகின்றனர்.

# நல்லாட்சி நிலவ...!

ர் 18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (20—9—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 10


டெல்லி அரசு இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டுப் பிரபுக்களுக்கு ஒய்யார வசதிகள் பல செய்து கொடுக்க "அசோகா ஓட்டல்" என்ற பெயரில் ஒரு உணவு விடுதி நடத்துகின்றது—ரூபாய் ஐந்து கோடி மூலதனத்தில். அந்த வணிகத்தில் இன்றுவரை அரசுக்கு 53·5-லட்சம் ரூபாய் நட்டம்.

சென்ற திங்கள் ஒரு செய்தி வந்தது — "பாதுகாப்பு இலாகாவில் ஊழல்" என. அதில் மத்திய அரசுக்கு 75-இலட்சம் நட்டம்.

பலகோடியைப் பணம் எனப் பாராமல்—மக்களின் கண்ணீரை வரிப் பணமாகப் பெற்றதை எண்ணிப் பாராமல் — செலவழித்துக்கட்டிய, பெரிய அணையாகிய பாக்ரா அணையில் உடைப்பு ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட வெள்ளத்தால் மத்திய அரசுக்கு கோடிக் கணக்கில் நட்டம்.

பெரிய இரும்பு ஆலை ஏற்படுத்தியுள்ள பிலாயில், மக்கள் குடியிருக்கக் குடியிருப்புக்கட்டினார்கள். அங்கே கட்டிய வீடுகள்—சரியாக, திட்டமிட்டுக் கட்டாததால்—அதில் மக்கள் குடியிருக்க வசதியில்லை. அதனால் மத்திய அரசு கொட்டித் தீர்த்த பணம் அனைத்தும் வீணாயிற்று.

இப்படிக் கோடி கோடியாய் வீண் செலவு செய்யும் மத்திய அரசு மாநில அரசுக்கட்குக் குறிப்பாகச் சென்னையின் சில முக்கிய திட்டங்கட்குப் "பணம் இல்லை" எனக் கூறிவிடுகின்றது.

தவிர, இந்தியை மறைமுகமாகப் புகுத்தி தமிழைக் கெடுக்கின்றனர். அதன் மூலம் தமிழினம் பழி வாங்கப்படுகின்றது வஞ்சகமாக!

வெளி நாடுகளுக்குச் செல்லும் கலைக் குழுவினரில் தென்னாட்டாருக்குப் பிரதிநிதித்துவமே தருவதில்லை. இதன் மூலம் மிகமிகத் தொன்மை வாய்ந்த தமிழ்க் கலையை—அதன் வளர்ச்சியை வஞ்சகமாகக் கெடுக்கின்றனர்—டெல்லியினர்.

இதுபோல் கேடுகள் பல அடுக்கடுக்காய்ச் செய்யும் மத்திய அரசைக் கண்டிக்க—அவர்களிடமிருந்து வேண்டிய உரிமையைப் பெற—தமிழையும் தமிழ் நாட்டையும், தமிழ் மக்களையும் முன்னேற்ற இங்கிருக்கும் அமைச்சரவைக்கு முதுகெலும்பில்லை. இங்குள்ள அமைச்சர் பெருமக்கள் தங்களது பதவி போய்விடக் கூடாதென்பதற்காக ஏதும் கூறாமல் வாய்மூடி மௌனியாய் இருக்கின்றனர். தங்களின் அதிகார வாழ்வும், உல்லாச நிலையும் நிலைக்க அடிமையாய் வாழ்ந்தாலும் போதுமென, எண்ணிக்கொண்டு, தங்கள் மொழி, இனம், நாடு அனைத்தையும் அடிமையாக்கிக் கொடுக்கின்றனர்—மாற்றாருக்கு!

இன்று வடவரசு செய்யும் செயலைத்தான் — அன்று வெள்ளையரசு இந்தியாவை அடிமைப்படுத்தியிருந்த பொழுது செய்தது.

இங்குள்ள பஞ்சை எல்லாம் கொண்டு சென்று, லெங்காஷயரையும், மான்செஸ்டரையும் மிகப் பெரும் பஞ்சாலைப்பகுதி ஆக்கினர் வெள்ளையர்.

இங்குள்ள இரும்புத் தாதுக்களையும் இன்னபிறவற்றையும் கொண்டு சென்று லிவர்ப்பூர் எனும் பகுதியை இரும்பாலைப்பகுதி ஆக்கினர்—வெள்ளையர்.

இன்றைய ஆட்சி முறையில் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் ஊழலும், பணவிரயமுமே காணப்படுகின்றது. அதிலும் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால், எது தேவை, எது அவசியம், எதனை உடனடியாகச் செய்யவேண்டுமென்ற திட்டம் எதுவுமின்றிக் காரியங்கள் நடைபெறுவது வாடிக்கையாகி விட்டது.

சென்னை மாநிலத்தின் சுகாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், அது மிக மிக வேதனையைத் தருவதாக அமைந்துள்ளது. நோயாளிகளுக்கென்று உள்ள மருத்துவ நிலையங்களில் நோயாளிகள் படும் வேதனை சொல்லுந்தரமன்று. ஒரு நோயாளி இருக்கவேண்டிய இடத்தில் ஒன்பது நோளாளிகளை இருக்கவைத்து, எந்த நோயாளிக்கும் மருத்துவம் சரியான முறையில் செய்ய முடியாத நிலையைச் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

சென்னை நகரிலுள்ள சர்க்கார் மருத்துவ மனையில் இருக்கும் மொத்தப் படுக்கைகள் 1125. ஆனால், அங்கு வரும் நோயாளிகளின் தொகை படுக்கைகளின் எண்ணிக்கையைவிட மூன்று நான்கு மடங்கு அதிகமாக உள்ளதென்ற தகவலை அறிய வெட்கமும் வேதனையும் நம்மைத் துளைக்கிறது.

ஆடம்பரச் செலவுக்கு அள்ளி இறைக்கும் தொகையில் ஒரு பகுதியையாவது இந்தத் துறைக்கு—அவதியுறும் நோயாளிகளின் நலனுக்குச் செலவிட்டால் எவ்வளவு நல்லதென்பதை எண்ணிப் பார்க்கும் நல்லியல்பு நாடாள வந்தவர்களுக்கு ஏற்படக் கூடாதா? ஆரன்மூர் அரண்மனைக்குக் கொட்டியழுததை ஒரு ஆஸ்பத்திரி கட்டியிருக்கக் கூடாதா? இதுபோல எத்தனையோ வேண்டாச் செலவுகளுக்கு விரயமாக்கும் இலட்சக் கணக்கான பணத்தை ஏழைப் பாமர மக்களின் உடல் நலம் பேணும் மருத்துவத் துறைக்குச் செலவிட்டுச் செம்மையான ஆட்சியை மக்கள் போற்றிப் பாராட்டும் வகையில் நடத்தக் கூடாதா?

✻

# சன்யாட்சன்

—[க. தங்கவேலன்]—

"குருதிகெட்டு, சூடு சொரணையற்று, சிந்திக்கும் சக்தி சிறிதுமற்று ஆட்டுமந்தைக் கூட்டமென ஆணவக்காரரின் தாள்பிடித்துக் கிடந்த மக்களுக்குப் புது இரத்தம் பாய்ச்சிய பூமான் — தன்மான அமுதூட்டிச் சூடும் சொரணையும் உண்டாக்கிய சூரன்—சிந்திக்கக் கற்றுக்கொடுத்த சிந்தனைச் செல்வன்— இளைஞர் பட்டாளத்தின் உள்ளத்தைத் தொட்டுத் தடவி ஓர் எழுச்சி தரும் நாதத்தை உண்டாக்கிய நாட்டின் நாயகன்— இரவு என்றும் பகலென்றும் பாராது பட்டி தொட்டிகளிளெல்லாம் பகுத்தறிவு ஒளியைப் பரப்பி வந்த புத்துலகச் சிற்பி— குள்ளநரிச் செயல் செய்த கூட்டத்தின் கூற்றுவன்— சுயநலத்தைச் சுட்டெரிக்கும் தீச்சுழல் நாட்டு மக்களை ஏணியெனக் கருதிடும் எத்தர்களைச் சாம்பலாக்கும் எரிமலை- அறிவுலகின் அண்ணல்— அறிஞர்க்கெல்லாம் அறிஞர்— ஒப்பற்ற தலைவர்!" என்றெல்லாம் உலகோரால் பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப் படுபவர்தான் சன்யாட்சன்! அறிஞரைப் போற்றி வாழ்ந்த அன்பு கனிந்த, உள்ளமுடையோர்! சிலர் எண்ணி எண்ணி இறுமாந்திடுவது போல், அவர் ஒரு கம்யூனிஸ்ட் வாதியல்ல! உண்மையான ஒரு சோஷியலிஸ்ட் வாதி!

தேசியம், குடியாட்சி, சோஷியலிசம்— இம்மூன்றும்தான் அவரது இன்ப நினைவுகள்! இதய கீதங்கள்! இலட்சிய முழக்கங்கள்!

அபினிப் போரால் நாகரிகம் நலிந்திருந்த தனது தாய்த்திருநாட்டின் வறுமையை எண்ணி, ஒரு மைல் சுற்றளவுக்குக் கணக்காக நூறு பேர்கள் வாழ்ந்ததெல்லாம் போய், அதிகாரப் பசியும் ஆதிக்க வெறியும் கொண்டலைந்த அயல் நாட்டாரின் ஆதிக்கத்திற்கு இரையானது தவிர, இருந்த இடத்திலேயே எல்லோரும் நெருக்கடியாக வாழ ஏற்பட்டதை நினைந்து வருந்திய மனத்தால், தெளிந்த மனத்தோடு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தன்னை ஒப்படைத்தார். புதியதோர் புனிதத் தன்மையைப் புகுத்த அரும்பாடுபட்டு மனத்திடலில் தேடிய உண்மைகள் பல. அவை தேசியம், குடியாட்சி, சோஷியலிசம்! நன்மைகள் தேடக் குடிகள்! தேடிய நன்மைகளை அனுபவிக்க சோஷியலிசம்! தேட வேண்டிய இடம் தேசம்! ஆகிய இந்த அருமையான மூன்று குணங்களே அவர் நெஞ்சை அடிக்கடி தொட்டுக்கொண்டிருந்தன. இவைகளே நாட்டை முன்னேற்ற முடியுமென்று திடமாக நம்பினார்!

இந்த அடிப்படையிலே நாட்டை ஆள வேண்டுமென்று எண்ணிய அவர், அந்தக் கருத்துக்களுக்கு ஒத்த மனமுடைய 'பாரோடின்' என்ற உருஷ்யரை துணைக்கழைத்துக் கொண்டு அவரையே அமைச்சராக்கி நாட்டைச் சீர்திருத்தம் செய்ய எண்ணினார்.

அவருடைய காலத்திற்கு முன்பு நாட்டில் மக்கள் செய்யும் வேலைகளுக்கு நேரம் வரையறுத்துக் குறிப்பிடப்படவில்லை. வேலை முற்றுப் பெற்றால் ஓய்வு என்ற நியதியே தவிர, அது இரவா? பகலா? உழைப்பிற்குப் பின் ஓய்வு வேண்டுமா? வேண்டாமா? அதற்கேற்ற ஊதியம் உண்டா? இல்லையா? அந்த ஊதியத்தால் அந்தப் பாட்டாளித் தோழனும், அவனது குடும்பத்தாரும் பிழைக்க முடியுமா? முடியாதா? தொழிலாளி நோய்வாய்ப் பட்டால் மருத்துவ உதவி இருக்குமா? இருக்காதா? என்ற வினாக்களுக்கெல்லாம் அந்தக் கேடான நாட்டில் இடமிருந்ததில்லை!

உழைப்பாளியின் உடலில் சிந்தும் வியர்வையைவிட, அவன் விழிகளில் சிந்தும் கண்ணீர்த் துளிகள்தான் அதிகமாக இருக்கும்! வெப்பத்தால் அவன் வாடிய உடலைவிட, அவன் குடும்பத்தில் வாடிய முகங்களே அதிகமாக இருக்கும்!

நோய் ஒன்று தனியாக இருப்பதாகவே அவனுக்குத் தெரியாது! ஏனெனில் எப்போதும் இயந்திரம் போல் சலியாது உழைப்பதால் நோய்ப்பட்ட அவயங்கள்தானே அவனது உறுப்புக்கள்!

பாமரரை பலசாலியாக்கி, பாழ் நிலங்களை உழுது பயிர் செய்ய ஏவினான்! பண்டங்கள் அதிகமாக்க் கிடைக்கவே அந்த நிலங்களுக்கு விதித்திருந்த தீர்வை வரியைக் குறைத்தான்! அபினி போதையிலிருந்த ஆயிரக்கணக்கான மக்களை ஆராய்ச்சிக்கூடத்திற்கு அனுப்பினான்! போர்ப் பயிற்சி நிலையங்கள் அமைத்து மக்களைப் போர்வீரர்களாக்கினான்! நல்லதோர் படையை நாட்டினான்! ஒரு அறை அபினியால் அடிமையான மக்களை, ஓராயிரம் அணுகுண்டாலும் அடக்க முடியாதென்ற அதிசய எண்ணத்தை அகிலவுலகிற்கு எடுத்துக் காட்டினான்!

நாளொன்றுக்கு எட்டுமணி நேர வேலைதான் என்று ஒரு திட்டமான காலத்தை நிர்ணயித்து, கூலியையும் திட்டப்படுத்தி, போதிய ஓய்வும் கொடுத்து ஆங்காங்கு பண்ணைக் கழகங்களை நிறுவினான்!

இதோடு நின்றுவிடவில்லை! அபின் போன்ற மதத்திலும் அநேக மாற்றங்களைச் செய்ய முன் வந்தான்! சமய சம்பந்தமாக உலவிவந்த கழகங்களையெல்லாம் கலைத்தான்! அவற்றிற்குரிய சொத்துக்களையெல்லாம் நாட்டின் நலத்திற்காக மக்களின் நல்வாழ்விற்காகச் செலவிட்டான்! காண்ணிலிருந்த மிகப் பழைய கோயிலொன்றைப் போலீஸ் பயிற்சிச்சாலையாக மாற்றியமைத்தான்! கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் மறைமுகமாக நாட்டின் அமைதியைக் குலைத்து வருவதைக்கண்டு அவர்களைத் தன் கட்சியில் சேர அனுமதித்தான்! ஆனால் அவன் நினைத்தவாறு அமைதி ஏற்படுவதற்குப் பதிலாக பிரபுக்களும் பிற்போக்காளர்களும், அவர்களை வெறுத்ததினால் இயோமின்-டாங் கட்சியின் ஒற்றுமை உடைந்து போயிற்று.

1925-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பன்னிரண்டாம் நாள் மாலை 5-மணி தான் கண்ட, சீன நாட்டின் பெருமைகளை எண்ணியெண்ணி இருதய ஆறுதலோடு, புன்னகை தவழ்ந்த முகத்தோடு தன் இறுதி வணக்கத்தை வையகத்திற்கு அளித்துவிட்டார்!

# வாழ்வா? போராட்டமா?

சென்ற இதழ் தொடர்ச்சி...

### காட்சி 6

இடம்: ஆலையின் சமீபம்.

பாத்திரங்கள்: குணசேகரன் இன்னும் பலர்.

[நீண்ட நாட்களாக இவர்கள் எண்ணிய காரியமான போராட்டத்தை நடத்தத் துவங்கிவிட்டார்கள்.]

குண:- இன்றுதான் நம்முடைய எண்ணம் பூர்த்தி அடையப் போகிறது! போராட்டம்! புரட்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும் நம்முடைய குறிக்கோள்! வாழ்வா? போராட்டமா? என்பவைபற்றித்தான்! ...? பணமே குறியாக இருக்கும் பண்பாடில்லாதவர்கள் உணரட்டும்! உலகம் பூராவும் நம் முரசொலி திக்கெட்டும் முழங்கட்டும்!!. அப்பொழுதாவது ஏழைகளின் கண்ணீர் ஏகபோகத்தில் இருப்பவர்களின் நெஞ்சைக் கரைக்கிறதா என்று பார்ப்போம்!?... நாட்டு மக்கள் அனைவரும் இப்பொழுதாவது நம்முடைய துயரைப் பார்க்கட்டும்!? புறப்படுங்கள்! நம்மைப் பற்றியும், நம்முடைய கொள்கையைப்பற்றியும் உல்லாச வாசிகள் உணரும் வரை தொடர்ந்தே செல்லுங்கள்! வேலை நிறுத்தம் செய்யுங்கள்!..? சரித்திரத்திலே ஒரு திருப்பத்தை உண்டு பண்ணுங்கள்! ஆலையிலே அமைதி நிலவட்டும்! அதைக் கண்டு நாம் எல்லாம் ஆனந்தமடைவோம்?!

கருணு:- அப்படியே செய்வோம்! ஆலை முதலாளிகளின் உள்ளங்களிலே நம் ஒப்புயர்வற்ற கொள்கைகளைப் புகுத்துவோம்?...!

[முதல் நாள் போராட்டம் நடைபெறுகிறது.]

### காட்சி 7.

இடம்: ராமதாஸ்-வீடு.

பாத்திரங்கள்: விமலா, ராமதாஸ்.

ராம:- ஒரு நாள் ஸ்ட்ரைக் முடிந்தது! யாருக்கு நஷ்டம்! ம்... தானாக வருவான்கள்! அவன்கள் வீட்டு அடுப்பிலே பூனை தூங்கத் தூங்கத் தானாகப் பணிந்து விடுவான்கள்! பார்...! சுத்த சோதாப் பயலுங்க...!

ஆடுதுறை

**அ. ஹபீப்முஹம்மது**

இவன்களாலே எதைச் சாதிக்க முடியும்?... சோற்றுக்குத் தாளம் போடும் போதே நெஞ்சு புடைத்துக்கொண்டிருக்கிறது! நம்மைப் போல இருந்து விட்டாலோ கேட்கவேண்டாம்! ஆகாயத்திலேதான் பறப்பான்கள்! முட்டாள்கள்!! இது ஒன்று தான் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்....? ஸ்ட்ரைக்...ஸ்ட்ரைக்...என்று?..!

விமலா:- நாம் தகுந்த அளவு அவர்களது குறையையும், கஷ்டத்தையும் நிவர்த்தி செய்திருந்தால் அவர்கள் இதுமாதிரி வேலை நிறுத்தம் செய்யமாட்டார்கள்?...!

ராம:- இவைகளைக் காட்டிலும் வேறு என்னதான் வசதி செய்து கொடுக்க முடியும்? இவன்கள் வேலை செய்யிறதுக்கு ஆளுக்கு ஒரு பங்களாவும் ரோல்ஸ்ராய்ஸ் காரும் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்கிறாயா? அப்படிக் கொடுத்தால்கூட ஆசை தீராதே!

விமலா:- அவர்களுக்கு என்னதான் நன்மை செய்திருக்கிறீர்கள்! அவர்கள் பிடிவாதக்காரர்கள்! ஆமாம்! பின்னால் நமக்குத்தான் நஷ்டம்!...

ராம:- அவர்களைவிட நான் பிடிவாதக்காரன்?... தெரியுமா?.. வயிறு காயக்காய ஸ்ட்ரைக் தானாக நிற்கும்?...

விமலா:- அப்படி எண்ணிவிட முடியுமா?... அவர்கள் அனைவரும் ஒருமனதாக இருந்து ஸ்ட்ரைக் செய்யும்போது?...

ராம:- நீ ஒன்றும் கவலைப்படாதே! வழிக்கு வந்துதான் ஆகவேண்டும்?...! மனைவிமாரின் கூக்குரலைக் கேட்டவுடன் மனம் மாறி விடுவார்கள்!... விளையாடுகிறார்கள் போலும்?...!

விமலா:- வேண்டாம்! புரட்சியை வளரவிடவேண்டாம்?...! அவர்களுக்குச் சம்பளஉயர்வும், போனஸும் அதிகம் கொடுங்கள்?...! குடியிருப்பு வசதியை அதிகப்படுத்துங்கள்!... பஞ்ச காலங்களில் கிராக்கிப் படியை உயர்த்துங்கள்!

ராம:- மிக நன்றாக இருக்கிறதே...? அவன்கள் திருந்தும் வரை நான் சும்மாதான் இருக்கப் போகிறேன்?...! நடப்பது நடக்கட்டும்?...!

**விமலா:-** தகுந்த முறையில் அவர்களை நல்வழிக்குத் திருப்பினுல் நமக்குத்தான் பெருத்த நன்மையுண்டு.

**ராம:-** இது வரையில் நன்மை கண்டது போதும்?...கோழைகள்!...

**விமலா:-** அப்படித் தாழ்வாக எண்ணிவிட முடியுமா?...

**ராம:-** பின்னே என்னை என்ன தான் செய்யச் சொல்லுகிருய்?...

**விமலா:-** அவர்கள் போராட்டத்திற்கு-பொருளாதாரப் போராட்டத்திற்குப் பரிகாரம் காண வேண்டும்!... அவர்களது வாழ்க்கையில் நிம்மதியை ஏற்படுத்த வேண்டும்?! என்னுடைய நோக்கம் அதுதான்?...!.!

**ராம:-** எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்! பெரிய தலைவேதனையாகப் போய்விட்டது. நீ போய் இரண்டு ஓவல் கொண்டுவா?...

**விமலா:-** நமக்கு ஓவல் கேட்கிறது! ஆனுல் ஏழைகளுக்கு அவல் கூடக் கிடைப்பதில்லை. சரி வருகிறேன். (தனிமையில்) உண்மையிலேயே குணசேகரன் கடமை கண்ணியத்திலிருந்து சிறிதளவும் விலகமாட்டார் போல் தெரிகிறது. அவரை என் உள்ளம் பாராட்டத்தான் செய்கிறது?...!

## காட்சி 8

இடம்: ராமதாஸ் வீடு.

**பாத்திரங்கள்:** விமலா, குணசேகரன்.

**விமலா:-** குணசேகர்! நீங்கள் நாளைக்கும் வேலை நிறுத்தம் தான் செய்யப் போகிறீர்களா?..

**குண:-** உழைப்பாளிகள் உற்சாகம் அடையும் வரை ஸ்ட்ரைக் தொடரும்!...

**விமலா:-** என் நிலைமை என்ன ஆவது?...

**குண:-** நீதான் தொழிலாளர்களின் தலைவியாக ஆகிவிட்டாயே?... எங்களோடு இருந்துகொண்டு போராட்டத்தை நடத்தேன்!... நல்லறிவு படைத்தவர்கள் அனைவரும் நாங்கள் செய்யும் இக்காரியத்தைப் போற்றுமல் இருக்கமாட்டார்கள்! அதனுல் தான் கூறுகின்றேன்?! எங்கள் கூட்டத்திற்கே தலைவியாக வந்துவிடு என்று?...

**விமலா:-** உங்கள் கூட்டத்திற்குத் தலைவியாக இருப்பதைக் காட்டிலும், உங்களுக்கே தலைவியாக இருக்க ஆசைப்படுகிறேன்!.

**குண:-** என்ன! எனக்குத் தலைவியா?...! மாளிகை எங்கே! மணல்மேடு எங்கே?...! நீ அரண்மனை வாழ்க்கையிலே அன்புக்கீதம் பாடுபவள்! நான் ஏழைகளின் கண்ணீரிலே எதிர்கால உலகைக் காண்பவன்!! நீ உல்லாச புரியைக் கண்டவள்! நான் உதிரத்தைச் சிந்திய உழைப்பாளிகளின் ஓட்டைக் குடிசையைக் கண்டவன்! நீ பட்டு மெத்தையிலே படுத்து ஆனந்தம் எய்தியவள்!. நான் பாராங்கல்லின் கடினத்திலே படுத்துப் பழக்கப்பட்டவன்?... நம் இரண்டு பேருக்கும் எப்படிப் பொருந்தும்?...!

**விமலா:-** அழகாகப் பேசுகின்றீர்களே!... பேச்சே இனிக்கிறதே! பேசிப் பேசித்தான் நாட்டு மக்களிடம் கொள்கைகளைப் பரப்புகிறீர்கள் போலும்!! அத்தகைய பேச்சு என்னையும் கவர்ந்ததில் ஆச்சரியமில்லையே?...! வாருங்கள்... நாம் அங்கு சென்று பேசிக் கொண்டிருப்போம்?...!...

**குண:-** விமலா! ராமதாஸ் பெற்ற பூங்கொடியே!. நான்...?...! ஒன்றும் புரியவில்லையே! இரவு நேரம்! தனிமை! அருமையான தென்றல்! உள்ளத்தையும் உடலையும் ஒன்று சேர்க்கும் விதம்!? அப்பப்பா...? விமலா... நீ பாடு ...?... நான் கேட்டு மகிழ்கிறேன்...?

**விமலா:-** பாடட்டுமா?... இதோ பாடுகிறேன்... [பாடுகிருள். மெய்மறந்திருக்கிருன்.] [பாட்டு முடிந்து] என்ன அப்படியே அயர்ந்து உறங்கிவிட்டீர்கள்? எழுந்திருங்கள்?...!

**குண:-** விமலா?...!

**விமலா:-** குணசேகர்!...?

**குண:-** நான் எங்கு இருக்கிறேன் ...ஹா...?...!

**விமலா:-** குணசேகர்!... என் மனம் உங்களையே நாடி வந்து விட்டது?...!

**குண:-** அது என் தவறல்லவே?.. நான் என்ன செய்வேன்?...

**விமலா:-** உங்கள் தவறும் அல்ல! என் தவறும் அல்ல...? பருவத்தின் தவறு...?...! ஆமாம்! உங்களை ஒன்று கேட்கின்றேன்! கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?...!

**குண:-** உன் அழகிய வாயால் வருகின்ற வார்த்தையைக் கண்டா கோபம் வரும்! நன்ருகக் கேள்,

**விமலா:-** நான் உங்களை!...

**குண:-** ஸ்ட்ரைக் செய்வதனுல் சிறையில் தள்ளவேண்டும் என்கின்ருயா...!

**விமலா:-** ஆம்! சிறையிலேதான்!?

**குண:-** காரணம் என்ன?...!

**விமலா:-** உலகத்திலே இரண்டு சிறைகள்தான் உண்டு!

**குண:-** என்னென்ன சிறைகள்?

**விமலா:-** இது தெரியாதா?... எண்ணிப் பாருங்களேன்!...?

**குண:-** யோசிக்க நேரமில்லை. சீக்கிரம் சொல்...!

**விமலா:-** அப்ப நான் சொல்லட்டுமா?...!

**குண:-** சொல் சீக்கிரம்...!...?

**விமலா:-** கள்வர்களைக் கடுங்காவலில் வைத்துத் தண்டிப்பது முதல் சிறை!

**குண:-** ம்... இரண்டாவது சிறை!

**விமலா:-** உங்களுக்குத் தெரிந்திருக்குமே...?

**குண:-** ஆயுள் தண்டனை பெற்றவரை இனம் தெரியாத இடத்துக்கு அனுப்புவது, இரண்டாவது சிறை! அப்படித்தானே!.

**விமலா:-** நீங்கள் சொல்வதெல்லாம் குற்றவாளிகளை அடைக்கும் சிறை! நான் சொல்லப் போவதோ?...!

**குண:-** நல்லவர்களை! நாட்டுக்கு உழைப்பவர்களை அடைக்கும் சிறையாக இருக்குமோ?

**விமலா:-** அவர்களுக்கும் சிறை உண்டு! ஆனுல்...?!

**குண:-** உன் எண்ணப்படி இரண்டாவது சிறை என்ன?

**விமலா:-** சொல்லட்டுமா?

**குண:-** எத்தனைத் தரம் கேட்பாய்?

**விமலா:-** இரண்டாவது சிறை உள்ளச் சிறை.

**குண:-** அப்படியென்றுல்!...

விமலா:- கன்னியர்கள் தங்கள் உள்ளங்களிலே, தங்களுக்குப் பிடித்த கட்டழகர்களின் இதயங்களைக் கவர்ந்து அடைத்து வைக்கும் சிறைதான் இரண்டாவது சிறை!

குண:- சபாஷ்! சிறையைப் பற்றிய விளக்கம் அபாரமாக இருக்கிறதே! இப்படிக்கூட உனக்குப் பேசத் தெரியுமா?

விமலா:- உங்களை இரண்டாவது சிறையில் அடைக்கலாம் என்று தீர்மானித்துவிட்டேன்.

குண:- அதை மட்டும் விட்டுவிடு. சிறையைவிட ஆரணங்கின் உள்ளச் சிறைக்கு அடிமைப்பட்டவர்கள் மீண்டதாகச் சரித்திரமே கிடையாதே! சுதந்திரமாகவே நான் வாழ ஆசைப்படுகின்றேன்...!...?

விமலா:- என் உள்ளத்திலே உங்களுக்கு ஒரு இடம் ஒதுக்கி வைத்துவிட்டேனே?...!

குண:- வேண்டாம் விமலா! வேண்டாம்!! உன் தந்தை இதை வெறுப்பார்...?!

விமலா:- மணவிழா நடப்பது எனக்குத்தானே அன்றி, என் தந்தைக்கு அல்லவே?!

குண:- உண்மைதான்! ஆனால் நான் ஓர் தொழிலாளி என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்!

விமலா:- காதலுக்கும், கடமைக்கும் தொழிலாளி, முதலாளி என்ற வேறுபாடு கிடையாதே?

குண:- நீ எண்ணுவதுபோல் சமுகமும் எண்ணினால்...?...!

விமலா:- சமுகம் உணரும்படி நாம்தான் புதிய சகாப்தத்தை உண்டுபண்ண வேண்டும்?!

குண:- இது நடக்கின்ற காரியமா? உன்னைப் போன்றவர்களின் வளமான வாழ்க்கை எங்கே?... என்னைப் போன்றவர்களின் வரண்ட வாழ்க்கை எங்கே?...! யோசித்துப் பார்?...!

விமலா:- யோசித்து என்றோ முடிவு செய்துவிட்டேன்! உங்களை... நான்...?...!

குண:- இது விஷயம் உன் தந்தைக்குத் தெரிந்தால்...?

விமலா:- உங்களைச் சிறையில் அடைத்து விடுவார் என்ற பயமோ?...!

குண:- அப்படியும் எண்ணத்தான் மனம் தோன்றுகிறது...? உன் தந்தையும் அப்படிப்பட்டவர் தானே...?...!

விமலா:- அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்?...! இன்று முதல் நாம் இரண்டு பேரும் ஒன்றுதான்...?...!

குண:- இரண்டு பேரும் ஒன்றுவது சரி...! என் கொள்கை நிறைவேற வேண்டுமே?

விமலா:- உங்கள் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்! உங்களோடு நான் சேர்ந்து கொள்ளக் கூடாதா?...!

குண:- தாராளமாக வரவேற்கிறேன்! காளையர்களின் உள்ளங்களிலே மட்டும் அல்லாமல்... கடைக்கண்பார்வையாளர்களின் கருத்திலே—நெஞ்சத்திலே எங்கள் கொள்கைகள் கலந்தது குறித்து வரவேற்கிறேன்?... ஆனால்...?

விமலா:- ஆனால் என்ன?...!...

குண:- சரி... சரி... உன் விருப்பத்திற்கு நான் குறுக்கே நிற்பானேன்...?! உன் எண்ணப்படியே செய்துகொள்...?

விமலா:- எங்கே இன்னொரு தரம் சொல்லுங்கள்...?...! ஆ... வாருங்கள் அந்த நந்தவனத்திற்குப் போவோம்...? அந்தப் பாட்டைப் பாடட்டுமா?...?...!

குண:- நீ பேசுவதே இன்பமாக இருக்கிறதே...?! பாட்டு வேறு வேண்டுமா?...! நேரமாகிறது என் தாய் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்...? மண் குடிசை என் வரவை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் இருக்கும்! வரட்டுமா?...!

விமலா:- ஆம்! ஒரு வாரம் வரையில்தான்... மண் குடிசை... மணல்மேடு... எல்லாம்? அப்புறம் நாம் மண் குடிசையைப் பார்க்க முடியாது...? மாளிகையின் முகட்டிலே... மனோரம்மியமான தென்றலிலே... உலகத்தையே மறந்து... உல்லாச வாழ்க்கையை அனுபவிக்கலாம்?...

குண:- நேரமாகிறது... வருகிறேன்...?...!

விமலா:- போய் வாருங்கள்! மறக்காதீர்கள்! வந்து வி...டு...ங்...க...ள்...?! (கனவு கலைந்து தூக்கத்திலிருந்து திடீரென்று எழுகின்றாள்.) என்ன?...! இவ்வளவு நேரமாகக் கனவா கண்டு கொண்டிருந்தேன்...? ஆ...?...! எவ்வளவு இனிமையான கனவு?...! உண்மையிலேயே அவர் என்னை விரும்புகிறாரா?. இல்லை நான் தான் அவரை நேசிக்கிறேனா?... ஒன்றும் புலப்படவில்லையே?...! என்னை அவர் ஏற்றுக்கொள்வாரா? நான் முதலாளி மகள்! அவர் தொழிலாளி மகன்! வேறுபாடு காட்டி வெறுப்பாரோ என்னவோ?...! உம்... வெறுக்க மாட்டார்?... என்னை வேதனைக்குள்ளாக்கமாட்டார்?...! இனி அவர்தான் நான்! நான்தான் அவர்!! எண்ணம் நிறைவேற வேண்டும்!!...?

[முன்னிலும் அதிகமாக குணசேகரனைக் காதலிக்கிறாள்! குணசேகரன் குறிக்கோள் எல்லாம் மக்களது முன்னேற்றத்திலேயே இருக்கிறது... விமலாவைப்பற்றி எண்ணக்கூட நேரமில்லை.]

## காட்சி 9

இடம்: ராமதாஸ் வீடு.

பாத்திரங்கள்: ராமதாஸ் விமலா.

[வேலை நிறுத்தம் தொடர்ந்து ஒரு வாரம் நடைபெற்றது. ராமதாஸ் மனம் சோர்ந்து விட்டார்.]

ராம:- விமலா! நான் என்னமோ சர்வ சாதாரணமாக இருக்கும் என்று நினைத்தேன்! ஆனால் இவர்களது மனவுறுதியும், கொள்கை ஒற்றுமையும் இன்றுதான் தெரிந்து கொண்டேன்...?...!

விமலா:- இப்பொழுதாவது தெரிந்து கொண்டீர்களே! உழைப்பாளிகள் உண்மை எவ்வளவு உறுதியும் சக்தியும் வாய்ந்ததென்று?...!

ராம:- ஆம்! உண்மையிலேயே சக்தி வாய்ந்ததுதான்...!

விமலா:- வேலை நிறுத்தம் வேண்டாம்! வேலைக்கு வாருங்கள் என்று கூறி அமைதியை நிலை நாட்டி அவர்கள் குறையைப் போக்குங்கள்!...

ராம:- ஆம்! நிச்சயம் போக்கத்தான் வேண்டும்!...

விமலா:- இந்த ஸ்டிரைக்கினால் நமக்கு எவ்வளவு நஷ்டம்?

ராம:- நஷ்டம்தான்! 3 இலட்ச ரூபாய்!... நினைக்கும்போதே உள்

ஏம் நேர்கிறதே! தேர்தலிலே ஒரு இலட்ச ரூபாய் செலவு செய்து தோற்றும் இப்படி நான் மனம் வேதனைப்பட்டதில்லை...? இன்னும் எவ்வளவு ஆகப்போகிறதோ?...

விமலா:- ஸ்ட்ரைக்கை வளரவிடாமல் தடுத்துவிடுங்கள்...?

ராம:- அப்படியே செய்கிறேன்! அடுத்து உன் திருமணத்தையும்...?

விமலா:- என் திருமணம் இருக்கட்டும்! ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் துயர் நீங்கட்டும்? ...பின்பு என் திருமணத்தைப் பற்றிக் கவனித்துக்கொள்ளலாம்!.. நாளைக்குத் தொழிலாளர்கள் முன்னிலையில் ஸ்ட்ரைக் செய்யவேண்டாமென்று கூறுங்கள்...?

ராம:- அவசியம் கூறுகிறேன்!... உணர்ந்துவிட்டேன் விமலா?...!

## காட்சி 10

இடம்: ஆலை,

பாத்திரங்கள்: இராமதாஸ், தொழிலாளர்கள்.

[ஏராளமான தொழிலாளர்கள் கூடியிருக்கின்றனர். அவர்கள் மத்தியில் ராமதாஸ் செல்கிறார்.]

ராம:- (உணர்ச்சி ததும்ப) தோழர்களே! கடமை வீரர்களே! கண்ணியம் மிக்கவர்களே! கட்டுப்பாடு கொண்டவர்களே!! எதையும் தாங்கும் இதயம் படைத்த எண்ணற்ற பெருமக்களே!! நீங்கள் அனைவரும் எனக்கு இனி மேல் தோழர்கள்தான்!!... இனி வேலை நிறுத்தம் வேண்டாம்!! உங்கள் மனவுறுதியைக் கண்டு பாராட்டுகின்றேன்!! இந்நிலை ஏற்படக் காரணமாக இருந்த என்னைக்கண்டு நானே வெட்கப்படுகின்றேன்!! ஏழைகளின் உள்ளங்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை என்பதை இன்றுதான் தெரிந்துகொண்டேன்!...? இது நாள் வரையில் உங்கள் துயரைப் பற்றிச் சிந்திக்காமல், சிங்கார வாழ்வு வாழ்ந்த என்னை மன்னித்து விடுங்கள்! பணம் படைத்த-கர்வத்தினால், பசியால் வாடுவோரின் பரிதாபநிலையைப் பாராமல் இறுமாப்புடன் இருந்த என்னை மன்னித்து, நான் செய்த தவறையெல்லாம் மறந்துவிடுங்கள்!! உங்களைச்சிரம்தாழ்த்திப் பன்முறை வேண்டிக்கொள்கின்றேன்! இனி வேலை நிறுத்தம் வேண்டாம்! இந்த வேலை நிறுத்தம் 3 இலட்ச ரூபாய் நஷ்டத்தைக் கொடுத்துவிட்டது!... இன்றுதான் உணர்கிறேன்!... உணரக்கூடிய தன்மை பெற்றிருந்தால் உழைப்பாளிகளின் துயரை என்றோ போக்கியிருப்பேன்! உல்லாச வாழ்வை என்றோ மறந்திருப்பேன்!! நடந்ததை எல்லாம் மறந்துவிடுங்கள்! இனி உங்களது எந்தத் துயரத்தையும் என் வாழ்நாள் உள்ளவரை போக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்!! இனி எல்லோரும் ஒற்றுமையாகவே இருப்போம்! முதலாளி உயர்ந்தவன்... தொழிலாளி தாழ்ந்தவன் என்ற வேறுபாடே இருக்கவேண்டாம்!! நாம் அனைவரும் சமம்! நான் பழைய இராமதாஸ் அல்ல...! உள்ளமும், கொள்கையும் திருந்திய உங்கள் தோழன் இராமதாஸ்!! படாடோபக்காரர்களின் பட்டியலிலே சேர்ந்த பயங்கரவாதி இராமதாஸ் அல்ல!! பாமர மக்களின் துயர்நீக்கப் பாடுபடப்போகும் அன்பன் இராமதாஸ்!! மறுமுறையும் கேட்டுக்கொள்கின்றேன்! சந்தோஷமாக வேலைக்குச் செல்லுங்கள்!!..

குண:- அப்படியே செய்கின்றோம்? எங்களைப்போன்ற எண்ணற்ற பெருமக்களின் துயரை இன்றுவது உணர்ந்துகொண்டதற்கு நாங்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்!...பாட்டாளிகளின் துயர், பணம் படைத்தவர்களின் உள்ளங்களிலே புகுந்து மறுமலர்ச்சியை உண்டுபண்ணியது குறித்துப்பெருமகிழ்ச்சியடைகின்றோம்! வாழ்க நம் தலைவர் இராமதாஸ்! ஏழைகளின் துயரை எண்ணிப்பார்த்து அவர்களை எல்லாம் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரப்போகும்நம்தலைவர் வாழ்க!!

மற்றவர்:- வாழ்க நம் தலைவர்!...

ராம:- தலைவன் என்று கூறவேண்டாம்! தோழன் என்று கூறுங்கள்! தலைவனுக்கு நான் அருகதையற்றவன்!...உண்மையான தலைவன் நம் குணசேகரன்தான்! (கைதட்டுதல்) இனி அவரே தலைவர்! தோழர்களே! சென்று வாருங்கள்.

குண:- இருள் சூழ்ந்து கிடந்த நம் சமுதாயத்தை உதயசூரியனின் ஒளிக்கிரணங்களால் ஒளி வீசச் செய்யப்பாடுபடப்போகும் இராமதாஸ்!

மற்றவர்:- வாழ்க!...

குண:- தொழிலாளர்களின் துயரைத் தீர்க்கப் பாடுபடப்போகும் தொண்டர் இராமதாஸ்!

மற்றவர்:- வாழ்க! வாழ்க!

குண:- குடிசைவாழ் குவலய மக்களைக் குபேரர்களாக ஆக்கப்பாடுபடப்போகும் உத்தமர் இராமதாஸ்!

மற்றவர்:- வாழ்க!... வாழ்கவே!

## காட்சி 11

இடம்: ராமதாஸ் வீடு.

பாத்திரங்கள்: ராமதாஸ், விமலா.

ராம:- ஸ்ட்ரைக் என்ற பேச்சையே கேட்க முடியவில்லையே?! தோழர்கள் எல்லாம் சரியாக வந்து கொண்டிருக்கிறார்கள்! தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கிவிட்டேன்! குணசேகரனும் உண்மையோடு உழைக்கிறார்...! அது சரி! உன் திருமணத்தை எப்பொழுது நடத்துவது?

விமலா:- ஏன் அடுத்த வாரமே நடத்திவிடுங்களேன்?

ராம:- என்ன அப்படிச் சொல்கிறாய்?...

விமலா:- வரப்போகும் மாப்பிள்ளை நம்மிடையே இருக்கும்போது நாம் ஏன் அவசரப்பட வேண்டும்!...?

ராம:- அப்படியென்றால் யார் அந்த மாப்பிள்ளை? உனக்குப் பிடித்திருந்தால் நான் தடைசெய்யப்போகின்றேனா?... யார் அந்த மாப்பிள்ளை?...

விமலா:- சொல்லட்டுமா?...

ராம:- துணிந்து சொல்... உன் தந்தை மறுமலர்ச்சி அடைந்தவர்! சொல்...

விமலா:- தொழிலாளர்களின் தலைவர் குணசேகர்தான் என் உள்ளத்தைக் கவர்ந்து சென்றவர்!!

ராம:- சபாஷ்! நான் உன் விருப்பத்திற்கு மாறாக நடக்கப்போவதில்லை!... தொழிலாளி — முதலாளி; ஆண்டான் — அடிமை; உயர்ந்தவன் — தாழ்ந்தவன்; மேல்ஜாதி — கீழ்ஜாதி என்ற வேறுபாட்டைத்தான் நான் என்றோ சமாதிகட்டிப் புதைத்துவிட்டேனே! குணசேகரன் உன்

மையிலேயே அதிர்ஷ்டக்காரன்தான்! குணசேகரன் உன் மனதைக் கவர்ந்தான் என்றால் ஆச்சரியம் ஒன்றும் இல்லை... எல்லோரையும் சமமாகக்கருதும் எனக்கு, நீ தேர்ந்தெடுக்கும் மணாளனைப் பற்றியா நான் மறுப்புக் கூறப்போகின்றேன்?... அடுத்த வாரமே மணவிழா நடத்தலாம்!! (அதுசமயம் குணசேகரன் வருகிறான்.)

ராம:- குணசேகர்! வாப்பா! உன்னைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தேன்!

குண:- என்னைப்பற்றியா? என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள்?...

ராம:- விமலா திருமண விஷயமாக!!

குண:- திருமணம் செய்யவேண்டியதுதானே? என்றால் ஆன உதவியையும், என் தோழர்களால் ஆன உதவியையும் செய்யக் காத்திருக்கிறோம்!...

ராம:- உன் உதவி மட்டும் இருந்தால் போதும்!...

குண:- அப்படி என்றால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!...

[விமலா குணசேகரனை அன்போடு பார்க்கிறாள்.]

ராம:- விளங்காவிட்டால் நான் விளங்க வைக்கிறேன்! உன் விஷயமாக!...

குண:- ஆமாம்! என் திருமண விஷயமாக என் தாயார் கூடப் பேசிக்கொண்டிருந்தார்!...

ராம:- எந்த ஊரில் பெண் பார்த்திருக்கிறார்கள்?

குண:- இனனும் நிச்சயமாகவில்லை!

ராம:- அப்படியானால் நீ பெரிய அதிர்ஷ்டக்காரர்தான்!

குண:- தாங்கள் பேசுவதெல்லாம் புதிராகவே இருக்கிறதே?

ராம:- புதிர் ஒன்றும் இல்லை! விமலா உன்னை மணந்துகொள்வதாக முடிவுசெய்துவிட்டாள்...

குண:- ஆ...! என்ன?... என் உள்ளத்தைப் பரிட்சை பார்க்கக் கையாளும் தந்திரமோ?...விமலாவாவது என்னை விரும்புவதாவது?...!...

ராம:- ஆம்! உண்மையிலேயே விமலா உன்னை விரும்புகிறாள்!!

குண:- இது நடக்கக்கூடிய காரியமா? நானோ அன்றாட வாழ்க்கையை ஆமையைப்போல் நடத்திச்செல்லும் சாதாரண தொழிலாளி! தங்கள் பெண்ணோ ரோல்ஸ் ராய்ஸ் காரில் சென்று ஆனந்த வாழ்க்கையை அனுபவிக்கும் தனவந்தரின் பெண்! இப்படி இருக்கப் பொருத்தம் ஏற்படுமா?...

ராம:- நீ நினைப்பது தவறு!...... விமலா திருமணம் வரை நீ தொழிலாளியாக இருக்கலாம்! அப்புறம் நீ விமலாவுக்கு முதலாளி!

[விமலாவும், குணசேகரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்.]

குண:- வாழ்க்கையில் இப்படித்தான் எதிர்பாராத சம்பவங்கள் நிகழுமோ?...

ராம:- ஆம்! அப்படித்தான் நிகழ்வதுண்டு!... பணக்காரன் ஏழையாவதும், ஏழை பணக்காரன் ஆவதும் வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத சம்பவங்கள்தான்! ஏன் யோசித்துக்கொண்டே நிற்கிறாய்?...

குண:- எனக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை...!

ராம:- நீ போகவேண்டாம்! உன் தாயாரைத் தயங்காமல் இங்கு வரச்சொல்!

விமலா:- போய் வாருங்கள்! அத்தையை அழைத்து வாருங்கள்!

ராம:- பார்த்தாயா குணசேகர்! விமலா அதற்குள் அத்தை முறை கொண்டாட ஆரம்பித்து விட்டாள்!...

குண:- வருகிறேன்!...

[செல்கிறான்]

## காட்சி 12

இடம்: குணசேகரன் வீடு.

பாத்திரங்கள்: குணசேகரன், அமுதவல்லி.

குண:- அம்மா! உலகத்தில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் எல்லாம் வாழ்க்கையில் ஒருவனுக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோதான் வருகின்றன! இராமதாஸ் மனம் திருந்தினார்! அத்துடன் அவர் பெண் விமலாவையும் எனக்கே மணம்முடித்துவைக்கப் போகிறாராம்!... எப்படியம்மா?...

அமுத:- என்ன சொல்லுகின்றாய்? ...இராமதாஸ் மகள் விமலா!...

குண:- என்னை மணக்கப்போகின்றாளாம்!...?

அமுத:- நிச்சயமாகவா?

குண:- ஆமாம்! சம்மதம் கேட்க உன்னைக்கூட அழைத்துக் கொண்டுவரச் சொன்னார்?

அமுத:- நம்பமுடியாத செய்தியாக இருக்கிறதே!

குண:- அப்புறம் நம்பலாம்! வா இராமதாஸ் வீட்டிற்குப் போவோம்.

[குணசேகரனும், அமுதவல்லியும் ராமதாஸ் வீட்டை அடைகின்றனர். இவர்களை ராமதாஸ் எதிர்கொண்டழைக்கிறார்.]

ராம:- வாருங்கள்! வாருங்கள்! (அமுதவல்லியைப் பார்த்து) என் பெண் விமலா உங்கள் குணசேகரனை மணப்பதாக முடிவுசெய்துவிட்டாள்! எனக்குப் பூரண திருப்திதான். குணசேகரன் போன்ற உத்தமன் எனக்கு மாப்பிள்ளையாக வரவேண்டும் என்று விருப்பம்தான்! உங்கள் விருப்பமும் சரியாகத்தான் இருக்கும் என்று எண்ணுகின்றேன்! திருமணத்தை அடுத்த வாரமே வைத்துக்கொள்ள வேண்டியதுதானே!

அமுத:- நான் என்ன கனவு காண்கின்றேனா?

ராம:- ஆம்! கனவுதான்! மக்கள் மறுமலர்ச்சி அடையும்போது பழைமை எண்ணங்கொண்டவர்களுக்கு அத்தகைய செய்கை கனவுபோல்தான் காட்சியளிக்கும்! நான் மனம் திருந்தியதும் ஓர் கனவுபோல்தான்! என் பெண் உங்கள் மகனை மணம் செய்துகொள்ள விரும்புவதும் கனவு போல்தான்!! நாளை முதலே எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிடுகின்றேன்? இந்த ஆலைக்கு இனிக் குணசேகரன்தான் தலைவர், மானேஜர் எல்லாம்!

அமுத:- நான் போய் வருகிறேன்!

ராம:- நல்லது! வளர்க சமத்துவம்! சகோதரத்துவம்.

[குணசேகரன் — விமலா திருமணம் வெகு சிறப்பாகத் தொழிலாளர்கள் மத்தியிலே நடைபெற்றது. இவர்களது இத்தகைய திருமணம் சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சியை உண்டுபண்ணி மக்களை விழிப்புறச் செய்துவிட்டது. தொழிலாளர்களின் துயர்மிக்க வாழ்வு இதன் மூலம் செம்மை பெற்றுவிட்டது.]

★

# "அழகு தப்பியது"

கடல்போல் பெருகி நொப்பும் நுரையுமாகச் செம்மை நிறத்தோடு ஓடும் காவிரி, கோடையின் வெம்மையால் சுண்டிச் சுருங்கிச்சென்று கொண்டிருந்தது. மணற்பரப்பில் உட்கார்ந்துக்கொண்டிருந்த நான், தூய்மைக்கு உவமையாக ஓடிக்கொண்டிருக்கும் பளிங்கு நீரைப் பார்த்துக்கொண்டிருந்தேன். வெள்ளித் துண்டுகள் துள்ளி விழுவது போல் மீன்கள் துள்ளித் திரிவதை என் மனம் ஆவலோடு நோக்கிக் களித்தது.

"வாத்தியார் ஐயா!"

என் பார்வையைக் குரல் வந்த பக்கம் திருப்பினேன். வள்ளி சிற்றிடையில் குடமேந்தி ஒப்புவமைகூறு ஓவியம் போல் நின்றுகொண்டிருந்தாள்.

"ஏங்கையா இப்படி வறிதே அமர்ந்திருக்கிங்க"—அவள் வாய் பண்ணிசைத்தது.

"ஆமாம் வள்ளி! காற்றுவாங்கிப் போகலாமென்று வந்தேன்"

அவள் எதையோ கூற வாய் திறந்தாள். என்ன நினைத்துக் கொண்டாளோ, அப்படியே அடங்கிக் கொண்டாள். இதைக்கண்ட நான், "வள்ளி! என்னவோ சொல்ல வாய் திறந்தாயே! அதற்குள் ஏன் நிறுத்திக்கொண்டாய்?"

"இன்று......உங்களிடம் என் பாட்டி எதுவோ பேசவேண்டுமாம்; இரவு வருவீர்களா?"

"அவசியம் வருகிறேன்"

அதற்குமேல் அவள் பேசவுமில்லை; நிற்கவுமில்லை. படித்துறையை நோக்கிச் சென்றுவிட்டாள்.

எதற்காக அழைத்திருப்பார்கள்? எனக்குப் புரியவில்லை. இருக்கட்டும்; இரவு வந்தால் தெரிந்து விடுகிறது என்று அமைதியோடு உட்கார்ந்திருந்தேன். ஆனால் என் மனம் மாத்திரம் வள்ளியைச் சுற்றி வட்டமிட்டது.

வள்ளி, நான் குடியிருக்கும் வீட்டிற்கு அடுத்து இருக்கும் கூரை வீட்டில் வசிக்கிறாள். வயது பதின்மூன்று இருக்கும். இருந்தாலும் அவளுக்கு வயதுக்கு மீறிய வளர்ச்சி என்றுதான் கூறவேண்டும். நான் இந்தப் பூங்குடிக்கிராமத்திற்கு மாற்றலாகி வந்து ஒருமாதம் கடந்துவிட்டது. வந்த புதிதில் தனிக்கட்டையான எனக்கு வள்ளி பல உதவிகளைச் செய்தாள். இப்போதுகூட எனக்குக் குடிநீர் கொண்டுவருபவள் அவள்தான். சிரிக்கச் சிரிக்கப் பேசுவாள். கபடமற்று நோக்குவாள். இதனால் வரண்டுபோயிருந்த என் நெஞ்சில் குளிர் ஊற்றை உண்டாக்கிவிட்டாள் என்றுதான் கூறவேண்டும். வள்ளியின் தோற்றத்தைக்காணும் போதெல்லாம் என்னுள்ளத்தில் ஒருவித கிளுகிளுப்பு ஏற்படுகிறது—ஏனோ தெரியவில்லை. அவளிடத்தில் குளிர்மையான கவர்ச்சி இருக்கிறது. எதிர்காலத்தில் சிறந்த அழகியாக வேண்டிய இலட்சணங்கள் இப்போதே குறைவின்றிக் காணப்படுகின்றன.

இரா. மாணிக்கம்

அந்திமயங்கியது; எங்கும் இருட்போர்வை சிறிது சிறிதாக விரிக்கப்பட்டது. நான் ஊரை நோக்கி நடந்தேன். வீட்டை அடைந்து விளக்கேற்றி வைத்துவிட்டு வெளித் திண்ணையில் அமரப்போனேன். அப்போது வள்ளி வந்து 'வாருங்கள்' என்றாள்.

அவள் வீட்டிற்குச் சென்றேன். இருமிக்கொண்டிருந்த வள்ளியின் பாட்டி தன்னைச் சமாளித்துக் கொண்டு "வா தம்பி! உட்கார்; என்று கூறியவளாய், வள்ளி! அந்தப் பாயை எடுத்துப்போடேண்டி" என்றாள்.

நான் உட்கார்ந்துகொண்டேன்.

"தம்பி! நம்ம வள்ளி! தாயில்லாதவள் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். எப்படியோ அன்றாடம் பூவிற்று என்னால் முடிஞ்சவரை அவளை மனங்கோணாமல்தான் வைத்திருக்கிறேன். ஆனால் ஒண்ணு; என்னாலே அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பமுடியவில்ல. என்ன செய்வேன் தம்பி! இந்தத் தள்ளாத வயதில் வயிற்றைக் கழுவுவதே பெரும் பாடாய் இருக்கிறது. அவளுக்கென்னமோ படிக்கக் கொள்ளை ஆசையாகத்தான் இருக்கிறது. எனக்குத்தான் வக்கில்லே. அது போகட்டும், தம்பி! உன்னிடத்திலாவது பாடம் படிக்கிறேன்னு இரண்டு மூன்று நாளா வள்ளி பிடிவாதம் செய்றா. கொஞ்சம் தயவுபண்ணி இந்த ஏழைகள்மீது கருணை காட்டுவாயா தம்பி."

ஏழைகளுக்கே இயல்பான தழுதழுத்தக் குரலில் அந்தக் கிழவி என்னை வேண்டினாள். என் கண்களில் நீர் துளிர்த்து நின்றது. "படிக்க ஆசையிருந்தும், வறுமை, ஏழைகளின் குறுக்கே நின்று அவர்களை நிரந்தர மூடர்களாக்குகிறது. ஏழைகளும் படிக்க இந்த நாட்டில் வசதியும் வாய்ப்பும் இல்லை. இதே அடிப்படையில் நம் கல்விமுறை சென்றால் இருக்கிற சாதிகளோடு படித்தவர் படிக்காதவர் என்ற சாதிகளும் தோன்றிவிடும் போலிருக்கிறது. இதற்கு விடிவே இல்லையா?" என் மனம் பொருமியது. "பாட்டி! வள்ளிக்கு நான் படிப்புச் சொல்லித் தருகிறேன்; கவலைப்படாதீர்கள்."

என்னுடைய இணக்கமான மொழியைக் கேட்டுக் கிழவி மகிழ்ச்சியால் என்னை வாழ்த்தினாள். வள்ளியின் முகத்தைச் சொல்லவா வேண்டும்? அன்றலர்ந்த மலரைப் போல் அவள் முகம் பொலிந்தது. பிறகு அவர்களிடம் விடைப் பெற்றுத் திரும்பினேன்.

மறுநாள் மாலை முதல் வள்ளி என்னிடத்தில் பாடம் கேட்கவந்தாள். ஆரம்பத்திலேயே வள்ளிக்கு படிப்பில் இருக்கும் கவனம், அவா, என்னைக் கவர்ந்துவிட்டது. பசித்தவன் உண்பதுபோல், பாடத்தை வெகு எளிதாகக் கிரகித்து தன் அறிவுப் பசிக்கு உணவாக்கினாள்,

எதையும் தன் கூரிய அறிவால் அறிந்து கொள்ளும் வள்ளியின் திறனைக் கண்டு என்னால் வியப் படையாமலிருக்க முடியவில்லை. நானும் மூன்று ஆண்டுகளாக நான்கைந்து பள்ளிக்கூடங்களைப் பார்த்துவிட்டேன். ஆனால் இவளைப்போல ஒருவர்கூட என் கண்ணுக்குப்படவில்லை. இதுநாள் வரை "வள்ளி அழகில்தான் இராணி'' என்று நினைத்தேன். இப்போது "நான் அறிவிலும் உயர்ந்தவள்'' என்பதைஉணர்த்தி விட்டாள்.

ஆறு மாதங்கள் காற்றாகப் பறந்தன. தமிழைப் பிழையற எழுதவும், அழகாகப் பேசவும் பயின்று விட்டாள். மேலும், எதற்கும் ஏன்? எப்படி? எதற்காக என்ற கேள்விகளை அடுக்கிக்கொண்டு போவதில் சளைக்கமாட்டாள். என்னால் முடிந்த வரை அவளது ஐயங்களை அகற்றி வந்தேன். என்னவோ இதில் எனக்கொரு மகிழ்ச்சி இருக்கத்தான் செய்தது. இது ஏனென்று மாத்திரம் என்னால் கூறமுடியவில்லை.

இறுதிக் காலத்தில் நிம்மதியாக இருந்து காலங்கழிக்க வேண்டிய வள்ளியின் பாட்டி இயந்திரம் போல உழைத்தாள். வலிமை பொருந்திய இரும்பே நாளடைவில் தேய்ந்துவிடுகிறது. சாதாரண — அதுவும் சக்தியற்ற அந்தக் கிழவியின் உடல் எத்தனை நாட்களுக்குத்தான் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைக்கமுடியும்? வியாதியின் கொடுமை வேறு அவளைத் துன்புறுத்திவந்தது. திடீரென்று ஒரு நாள் படுத்த படுக்கையாகிவிட்டாள். அவளுடைய உடலின் தளர்ச்சி வியாதியின் வளர்ச்சிக்கு வகைசெய்தது. நாளுக்குநாள் அவளுடைய வியாதி அதிகமாகிக் கொண்டேவந்தது. பூக்கூடையை எடுத்தால்தான் வள்ளியின் வீட்டில் அடுப்புப் புகையும். பொறுப்பற்று வளர்ந்து வந்த வள்ளிக்கு இந்த இக்கட்டான நிலை கலக்கத்தை உண்டாக்கியது.

"நான் போய் பூவிற்று வருகிறேனே'' வள்ளி என்னிடம் யோசனை கேட்டாள்.

"வேண்டாம் வள்ளி! போறு; என் வீட்டில் சமையல் செய்து நீங்களும் சாப்பிடுங்கள். நான் பாட்டிக்கு மருந்துவாங்கி வருகிறேன். குணமாகிவிடும்.''

''வேண்டாமுங்க; பாட்டி ஏதாவது நினைச்சுக்கும்''

"அவர்கள் ஒன்றும் நினைக்க மாட்டார்கள். ஆபத்துக்காலத்தில் ஒருவர்க்கொருவர் உதவிசெய்து கொள்வதுதானே மனிதத்தன்மை. வேண்டுமானால் நானே பாட்டியிடம் கூறுகிறேன் வா! போகலா"மென்று அழைத்துச் சென்றேன்.

என். வேண்டுகோளுக்குக் கிழவி முக்கி முனகிச் 'சரி' என்று கூறினாள்.

கிழவியின் உடல் மோசமாகிவிட்டது. அவளுடைய உயிருக்கு ஆதாரமான கொஞ்சநஞ்ச இரத்தமும் வெளிவந்துவிட்டது. டாக்டரும் பார்த்துக் கைவிரித்துவிட்டார். இனி ஊசலாடிக்கொண்டிருக்கும் உயிர்போவதுதான் பாக்கி.

நானும் வள்ளியும் கிழவியின் அருகிலேயே இருந்தோம். வள்ளி கதறினாள்; திக்கற்றுப் போய்விடுவோமே என்று வேதனையால் தேய்ந்தாள். கிழவி தன் வெளிறிப் போன கண்களால் நோக்கினாள். ஏதோ கூற வாயெடுத்தாள். முடியவில்லை; முடிந்துவிட்டாள். உணர்வற்ற மரக்கட்டையாகிவிட்டாள்.

"என்ன கூற விரும்பினாளோ! அதற்குள் உயிர் பிரிந்துவிட்டதே!'' என்னால் துக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை — அழுதேவிட்டேன்.

வள்ளி அழுதாள்; கண்கள் வரண்டு வீங்கும்வரை அழுதாள். உடல் சோர்ந்து விழும்வரை அழுதாள்.

இறுதிச் சடங்கு நிறைவேறி விட்டது.

வள்ளி, பாட்டியை நினைத்துக் கொண்டு அடிக்கடி அழுவாள். சாப்பிடாமல் கூடப் பட்டினிகிடப்பாள். அவளைத் தேற்றுவதே எனக்கொரு வேலையாகிவிட்டது.

தனி மரமாகிவிட்ட எனக்கு, உங்களுடைய ஆதரவும் அன்பும் இல்லாது போயிருந்தால், இதற்குள் ஆடிக்காற்றில் அகப்பட்ட துரும்பு போல் எங்கேயோ சிதறுண்டு போயிருப்பேன்—வள்ளி விம்பியபடியே கூறுவாள்.

"உன்னைப்பற்றி எவ்வளவு உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்? இனிமேல் இப்படி முறிந்த மனத்தோடு பேசினால் உன்னோடு உயிரோடிருக்கமாட்டேன்.'' வள்ளியை அன்பாகக் கடிவேன்.

காலம் நீரில் விழுந்த மணற்கட்டியாகக் கரைந்தது. நான் கூறும் ஆறுதல் மொழியால் முன் போல் வள்ளி, சிரித்துப் பேசத் தலைப்பட்டாள். அவள் உள்ளத்திலிருந்த 'பாட்டி' என்ற நினைவுப் பள்ளம் தூர்ந்து கொண்டே வந்தது.

எனக்கு வள்ளியினிடத்தில் வர வர விளக்கிக் கூறமுடியாத ஒரு வகையான பாசப்பிணைப்பு இறுகிக் கொண்டே வந்தது. வள்ளியின் வனப்பான உடலில் இளமையின் மதமதப்பு விளங்க அழகுச் சிலையாய் காட்சியளித்தாள். பருவத்தால் பூத்துவிட்ட அந்தப் பூங்கொடியைக் காணும் போதெல்லாம் இன்ப வேதனையால் என் மனம் தாக்குண்டு நினைவுச் சுழலில் சிக்கித் துயர்படும். என் இதயத்தில் சிறு முளையாய் இருந்த ஒன்று இப்போது இனங்கண்டு கூறும படியான செடியாக வளர்ந்துவிட்டிருந்தது.

பலமுறை வள்ளியினிடத்தில் என் கருத்தைக் கூற முயன்றேன். என்றாலும் இயலவில்லை. என் உள்ளுணர்வு துணுக்குற்றுத் தடுத்துக்கொண்டே வந்தது.

சதா துரு துருவென்று இருக்கும் வள்ளிக்கு சும்மா இருக்க முடியவில்லை. "தோட்டத்தில் பூக்கள் வீணாக மலர்ந்து அழிகின்றன. அதைக் கட்டி விற்று வருகிறேனே. எத்தனை நாள் உங்கள் உணவையே உண்டு காலங் கழிப்பது'' என்றாள்.

வாழ்நாள் முழுவதும் அவள், என் உழைப்பை உரிமையோடு சாப்பிடவேண்டுமென்று விரும்பும் என்னுடைய எண்ணத்தை அவள் எப்படி அறிவாள்?

நான் ஒப்பவில்லை; அவள் மனம் ஏனோ நான் சொல்வதற்கு ஒருப்படவில்லை.

'சரி! உன் விருப்பம்; செய்' என்று கூறிவிட்டேன்.

வள்ளி, காலையில் எனக்கு உணவு சமைத்து வைத்துவிட்டு, பிறகு, பூ விற்கப் போவாள். மாலையில்தான் திரும்புவாள். அவளுக்குத் தினமும் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் கிடைத்துவிடும். "தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி வந்துவிட்டது'' என்று வள்ளி

பெருமிதம் கொள்வாள். எனக்கென்னவோ அவள் வெளியில் போய் வருவது பயங்கரச் செயலாகவே தோன்றியது. ஏனென்றால் வள்ளியின் அழகுக்கு அடிமைப் படாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். எனவே அவளுக்கு எப்போதும் ஆபத்துத்தானே!

ஒவ்வொரு நாளும் அவள் மாலையில் திரும்பி வந்த பிறகுதான் எனக்கு அமைதி ஏற்படும். அன்றொரு நாள்; மாலை நேரம்; விம்மிய முகத்தோடு வள்ளி வந்தாள்.

நான் பதறிப் போய் "ஏன் வள்ளி, ஒரு மாதிரியாயிருக்கிறாய் என்றேன். அவள் மௌனமாக இருந்தாள். பிறகு என் வற்புறுத்தலுக்கு இணங்கிப் பேசலானாள்.

"அந்தக் கோடிவீட்டு பண்ணையார் மகன் என் கையைத் தொட்டு வம்பு செய்யப் பார்த்தான். நான் ஓடிவந்துவிட்டேன்." கண்களில் நீர் கோர்த்து நிற்கக் கூறினாள்.

நான் நினைத்தது சரியாகிவிட்டது என்று மனத்தில் எண்ணியபடியே" இதற்குத்தான் வள்ளி உன்னைப் பூவிற்கப் போகவேண்டாமென்று தடுத்தது! இப்போதாவது புரிகிறதா? என்று மனவேதனையோடு கூறினேன்.

நான் கூறியதைக் கேட்டுக் கொண்டாள்; பதில் கூறவில்லை. வீட்டிற்குச் சென்றுவிட்டாள். மறுநாள் பூவிற்கப் போகமாட்டாள் என்று நினைத்தேன். அவளா நிற்பாள்! பிடிவாதக் காரியாயிற்றே; வழக்கம்போல் சென்றாள். ஆனால் தினமும் ஏதாவது ஒரு செய்தியை பூக்கூடையில் போட்டுக்கொண்டு வராமல் இருக்கமாட்டாள். எனக்கு ஒரே வெறுப்பும் வேதனையுமாக இருக்கும்.

"இப்படித் தொந்தரவு ஏற்படுகிறது என்பதைத் தெரிந்தும் நீ வெளியில் போய் வருகிறாய். ஆபத்து என்று நான் கூறியும் அதை அலட்சியப்படுத்துகிறாய். ஏன் வள்ளி என்னதான் உன் மனத்தில் நினைத்துக்கொண்டிருக்கிறாய்."

நான் கோபமாகவே கூறினேன். அப்போதாவது மசிவாள் என்ற நோக்கத்தால்;

இந்தக் காலாடிப் பயில்களுக்குப் பயந்தா வீட்டில் இருந்துவிடுவது! முடியாதுங்க; என்னதான் செய்வார்கள்? பார்க்கலாம்;

வள்ளி இளமையின் துடுக்கோடு கருவியபடி கூறினாள்.

எனக்கு என்ன சொல்லுவதென்றே தோன்றவில்லை. "ஆபத்தை வலிய அழைக்கிறாய்; பிறகு வருவதைப் படு" என்று சலிப்போடு கூறிவிட்டுப் பள்ளிக்கூடம் சென்றுவிட்டேன்.

பள்ளியிலிருந்து வீடுதிரும்பிய நான், புத்தகம் ஒன்றை எடுத்து அதில் என் மனத்தை ஓடவிட்டுக் கொண்டிருந்தேன். காலடி ஓசை கேட்டு என் விழிகளை எதிர்ப் பக்கம் திருப்பினேன். வள்ளி என் அருகில் நின்று கொண்டிருந்தாள். எப்போதும் களைகட்டியிருக்கும் அவள் முகம் வாடிக்கருகி இருந்தது. மீண்டும் ஏதோ நடந்திருக்கிறது என்பதை யூகித்துக் கொண்ட நான், வேண்டுமென்றே பேசாமல் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். 'பொட்' டென்று ஒரு சொட்டு நீர் புத்தகத்தைப் பிடித்திருந்த என்கையின்மீது விழுந்தது. அந்தக் கண்ணீரின் வெதுவெதுப்பு என்னைக் கலங்கச் செய்துவிட்டது. வள்ளியின் விழிக்கோணத்தினின்று வழியும் நீர்த்தாரை அவள்பட்ட துயரைக் கூறாமல் கூறியது.

என்ன வள்ளி நடந்தது? ஏன் அப்படி இருக்கிறாய்? சொல்லேன்; என்றேன். அவள் துக்கத்தை அடக்கிக் கொண்டு கூறினாள்.

பண்ணையார் மகன் மறுபடியும் என்னிடம் வம்புசெய்தான். நான் காரி உமிழ்ந்துவிட்டேன். அவன் கோபத்தோடு "வள்ளி! என்னைப் பகைத்துக்கொண்டு இந்த ஊரில் நீ வாழமுடியாது. அநாதையான நீ எனக்கு இணங்கிவிடு. இல்லே நீ இடக்கு செய்திட்டே இருந்தே! உன்னை இல்லாமே செய்திடுவேன்" என்று வஞ்சம் கூறினான். நான் மேலும் பேசாமே அவன் பிடியிலிருந்து திமிறிவந்துவிட்டேன். எனக்குப் பயமாக இருக்குதுங்க அவன் எதற்கும் துணிந்தவன்"

நான் பேசவில்லை. மேலும் தொடர்ந்தாள். "நான் செய்தது தப்புத்தாங்க; நீங்க சொன்னபடி வீட்டில் இருந்திருந்தால் இந்தத் தொல்லை எனக்கேன் வருகிறது. நீங்கதான் என்னை மன்னிச்சுக் காப்பாற்ற வேண்டும்"

வள்ளி என் கால்களில் விழுந்துவிட்டாள். எதிர்பாராத அவள் செய்கையைக் கண்டு பதறிப் போனேன்; அவளை வாரி எடுத்து நிறுத்தி "என்ன காரியம் செய்து விட்டாய்; போவள்ளி" என்று வருத்தத்தோடு நான்கூற அவள் அசைவற்றுச் சோக பிம்பமாய் நின்றுகொண்டிருந்தாள்.

நான் சிந்தித்தேன்; ஏன் என் ஆசைக் கனவை வள்ளியிடத்தில் கூறக் கூடாது? அவள் ஏற்றுக் கொண்டால் இந்த இடர்ப்பபாடெல்லாம் ஏற்படாதல்லவா' என்னதான் சொல்கிறாளோ பார்ப்போமே!

என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு "வள்ளி! நான் சொல்வதைத் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாயே! பீடிகையோடு கேட்டேன்.

இனி நீங்கள் சொல்வதை ஏன் தட்டுகிறேன். பட்டது போதும் சொல்லுங்கள்.

நான் தயங்கினேன். என் தவிப்பைக் கண்டு பரவாயில்லை; கூறுங்கள் என்றாள்.

"உன்னை விரும்புகிறேன் வள்ளி! நான் சொல்வது உனக்குப் பிடிக்காவிட்டால் விட்டுவிடு. விகற்பமாக மாத்திரம் எடுத்துக் கொள்ளாதே." ஒருவாறு மனத்தின் ஆசையை ஒருமுகப்படுத்திக் கூறிவிட்டேன்.

வள்ளியின் வாடிய முகம் மின்சார வேகத்தில் காந்தச் சுடராய்க் கமழ்ந்தது. அவள் அதரங்கள் அசையவில்லை. கண்கள் சுழன்று பேசின. அவளுடைய இதழ்க் கடையில் புன்முறுவல் அலர்ந்து ஒளிர்ந்தது.

நீங்கள்...... எனக்குக் கிடைத்தற்கரியசெல்வம்; நான்கொடுத்து வைத்தவள்தான்.

நாணத்திரை வள்ளியின் நாவை மூடிவிட்டது. அதற்குமேல் அவள் பேசவில்லை.

[அடுத்த இதழில் முடியும்]

# பாரதி விழாக் கொண்டாடுவோரே!

பாரதிவிழாவினை 'பக்திசிரத்தை'யோடு ஆண்டுதோறும கொண்டாடுகின்றனர்—காங்கிரசார்—ஏதோ பாரதியார் அவர்களுக்கு மட்டுமே உரியவர் என்ற நினைப்போடு.

ஆனால் அவர் கூறும் கருத்துக்கள் எதனையும் இவர்கள் பின்பற்றுவதில்லை. அவருடைய கருத்துக்கள் சிலவற்றை அவரது விழாவினைக் கொண்டாடும் இச்சந்தர்பத்தில் நினைவுபடுத்துகிறோம்.

"துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக் கண்டு
வீட்டிலொளிப்பார்,
எப்போதும் கைகட்டு வார்—இவர்
யாரிடத்தும் "பூனைகள்" போல்
ஏங்கிநடப்பார்
நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
"நிலைகெட்ட மனிதரை" நினைந்து
விட்டால்
கிலிபிடித்த நெஞ்சினைப் போ போ போ!
"கீழ்மை" என்றும் வேண்டுவாய்
போ போ போ!
இன்று பாரதத்திடை "நாய்" போலே
ஏற்ற மின்றி வாழுவாய்
போ போ போ!
மண்ணிலின் பங்களை விரும்பிச்
சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்
வாங்கினுல்
கை கொட்டிச் சிரியாரோ?—

என வீராவேசத்துடன் கண்டிக்கின்றார். அடிமைப் புத்தி கொண்ட அந்தச் சுயநலப் புலிகளை பூனை, நாய், என்று மிருகங்களாகவும், கயவர், குருடர் என்ற இழிந்த மனிதர்களாகவும் கருதுகின்றார்! கண்டிக்கின்றார்! புத்தி கூறுகின்றார்!

உண்மையில், 'பாரதியின் வீரம் வேறு எவருக்கும் தோன்றாது என்று திண்ணமாய்க் கூறலாம்.

**தென்னவன்**

பாரதியின் கவிகள் ஒவ்வொன்றும் உணர்ச்சித் துடிப்பாகவே இருக்கின்றது. அவர் தம் பாடல்களை உரத்த குரலில் பாடினல், பாடுபவருக்குத் தன்னையும் அறியாமல், ஓர் உணர்ச்சி பிறந்து, அது பாரதியின் கவியுடன் இரண்டறக் கலந்து கேட்பவரைச் செயலில் தள்ளும் உயிர்ச் சொற்களாய்த் திகழும்!

அவர், சமூகத்தைப்பற்றியும், பெண்களைப்பற்றியும், சமயத்தைப் பற்றியும் புராணங்களைப்பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாக உரிமை வேட்கையைப்பற்றியும் தன் கவிதைகளில் சிந்தியுள்ள கருத்துக் குவியல்கள் ஒவ்வொன்றும், மரத்துப்போன உள்ளங்கட்கும் உணர்ச்சியற்ற போக்கிற்கும் தக்க மாமருந்தாம்.

மராட்டிய வீரர் லோகமான்ய பால கங்கார திலகர், பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய், வங்காள வேங்கை நேதாஜி, தென்னகத்து மாவீரர்கள் வ. உ. சி. குமரன் போன்ற சரித்திரப் புகழ்பெற்ற வீரர்களைப்போல் நம் தாயகத்துச் சிங்கம்-தமிழ் வீரத்தின் தோற்றம். பாரதியும் ஒருவர்.

நூறு எழுத்தாளர்கள் சாதிக்கும் செயலை ஒருகவிஞன் சாதித்து விடுவான்—இலக்கிய உலகில்.

ஆங்கிலக் கவி செகப்பிரியரின் கவிதைப் படைப்புகளுக்கு ஆயிரக் கணக்கான விளக்க உரைநடைகள் தோன்றியிருக்கின்றதல்லா! அது போல் நம் தமிழ் தந்த இலக்கியத் தலைமகன்—நீதியின் முதல் மகன்—வள்ளுவப் பெருமகனார் யாத்த இரண்டடிக் குறளுக்குப் பக்கம் பக்கமாக—நூல் நூலாக—விளக்கங்கள் எழுதித்தரவில்லையா—நமக்கு! நம் தமிழ் அறிஞர்களும் மேல்நாட்டறிஞர்களும்.

கவிஞர்களின் ஒருவரி கூறும் அற்புத வருணனைகளை, எழுத்தாளன் ஒரு நூறு பக்கங்களில் விரித்துக் கூறவேண்டும். அவ்வாறு கூறினுலும் கவிதையின் தனியழகை, உரைநடை பெறமுடியாது! கவிஞனும், எழுத்தாளனும் சிந்தனை உலகில் ஒன்றுக உலவினுலும். கவிஞன் அந்த உலகில் உலவும் வகையே வேறு! அவன் தனக்கென ஒரு தனி வழியைக் கண்டு பிடித்துக்கொண்டு, தனது கவிதையை, இனிமை, கருத்தாழம், உணர்ச்சி போன்றவற்றுடன் கலந்து மக்களின் முன் படைக்கின்றான். சொற்கள் கவிஞனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன.

அப்படி உயர்ந்த கவிஞனைத் தோன்றித்தான் மக்கட்கு உரிமை வேட்கையை—விடுதலைப் பற்றினை ஏற்படுத்தினர் பாரதியார். அஃது இல்லாதவரை மிருகமென்றும், மரக்கட்டை என்றும் இழித்துக்

கூறி—இடித்துக்காட்டி—உணர்ச்சி பெற்று விழிக்கவைக்கின்றார் —

"அச்சமில்லை அச்சமில்லை—
அச்சமென்பதில்லையே

என்றும்,

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
செகத்தினை அழித்திடுவோம்"

என்றும் கூறினர்.

நம் பாரதி புராணத்தின் மீது சாடுவதைப் பாருங்கள்: மிக வியப்பாய் இருக்கும்!

கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப்
பெண்ணும்
வடமலை தாழ்ந்தத னாலே தெற்கில்
வந்து சமன்செயும் குட்டை முனியும்
நதியி னுள்ளேமுழு கிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
வீமனும் "கற்பனை" என்பது கண்டோம்!

சாத்திரங்கள் ஒன்றும் காணார் பொய்ச்
சாத்திரப் "பேய்கள்" சொல்லும்
வார்த்தையை

இங்கு பாரதியார் இராமாயணம், பாரதம் போன்றவற்றையும், சாத்திரங்களையும், புராணங்களையும் பொய் என்றும், கற்பனை என்றும் பேய்கள் என்றும் கூறுகின்றார். அவற்றையெலாம்நம்பித்தொழுது வாழும் அவரது பக்தர்கள் எல்லாம் இனியாவது திருந்துவார்களா? பகுத்தறிவுக் கவி பாரதியாரைத் தங்கள் மூடநம்பிக்கைத்தூசி படிந்த கண்களால் பார்க்க முனைவார்களா?

மதம், ஒடுக்கப்பட்ட - உணர்ச்சியற்ற—ஒரு உலோகம் — என்றான் லெனின். மதம் மக்களுக்குஅபினி போன்றது என்றான் இன்னொரு அறிஞன். அதைப்பற்றி நம் பாரதியார் கூறுவதைப்பாருங்கள்:

சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ? பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை-அழிவீரோ?

எனக் கேட்கின்றார் மக்களை? மதம் நம் பாரதிக்கு பித்தமதமாக-ஒழுங்கற்றதாகத் தோன்றுகின்றது. பித்தம் பிடித்த மனிதனை ஒப்புமா உலகம்? ஆனால் இங்குள்ளவர்கள் - பாரதியாரைத் தங்களுத்தான் சொந்தம் எனக் கொண்டாடுபவர்கள்—மதம் நிலைக்க எந்தக்கொடிய செயலையும் செய்யத் துணிகின்றனரே! இவர்கட்கும் பாரதிக்கும் எவ்வளவு தூரம்?

இன்று தமிழகத்திலும், ஏனைய பகுதிகளிலும் மனிதனுக்கு மாறாத தொல்லைகளை எல்லையின்றித் தருவது சாதி! அந்தச்சாதி சிலசமயம் மனிதனை மிருகமாக்கிவிடுகின்றது! அது மனித இதயத்தில் உயர்வு தாழ்வு எனும் நீங்காப் பேதைமையைத் தோற்றுவிக்கின்றது. அன்பைக் கெடுக்கின்றது. அறத்தை ஒழிக்கின்றது.

அத்தகைய தீய சாதியைப்பற்றிப் பாரதியார் கூறாத இடமே இல்லை—தம் கவிதைகளில். அத்துணை வெறுப்பு அவருக்கு அந்தப் பொல்லாத சாதியின்மீது! வெள்ளையனை விரட்ட மக்களிடையே ஒற்றுமை தேவை என்பதைக் கண்டார். ஆனால் மக்கள் இந்தியாவில், மதத்தாலும், கேடுகெட்ட சாதியாலும் பிரிக்கப்பட்டு, ஒற்றுமையின்றி வாழ்வதைக் கண்டு மனம் மிக நொந்தார். வேதனைகொண்டார். அவைதான் அவரது கவிதைகளில் எங்கும் பரவிக் கிடக்கின்றது! இதோ:-

"பார்ப்பானை ஐயரென்ற காலமும்
போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே"
எல்லோரும் ஒன்றெனும் காலம்
வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே"
வேத மறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலைதவ றாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாயக்கன்
பண்டங்கள் விற்பவன் செட்டி—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை—தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை"

"நாலு வகுப்பும்இங் கொன்றே" என்று தொழில் வகையால் ஏற்பட்ட பிரிவினையைப் பாரதியார் கூறுகின்றார். இதையே வள்ளுவரும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

—எனக் கூறியுள்ளார்.

ஒருவன் பள்ளர் குடியிற் பிறந்ததனால் தாழ்ந்தவனாகவும் பார்ப்பான் குடியிற் பிறந்ததனால் உயர்ந்தவனாகவும் ஆகிவிடமாட்டான். அவனவன் செய்யும் தொழில்களால், அவனவனுக்குரிய, வெவ்வேறு வகையான இயல்புகள்—அதாவது அறிவின் தன்மைகள்—இருப்பதால், அவர்கள் அனைவரும் இயல்புகளால் ஒன்றுபடுவதில்லை." என்று வள்ளுவர் கூறிய அதே கருத்தைத்தான் பாரதியாரும், பார்ப்பான், நாயக்கன், செட்டி என விதந்து கூறினர்.

ஆனால் நாம், பாரதிக்கு விழா எடுக்கும் நாம்—அவர்தம் கொள்கையினைக் கைக்கொண்டுள்ளோமா? அன்பாய்ப் பழகும் நண்பரது பெற்றோர் பெயர் — ஆம் அவர் தந்தை "மாடசாமிக் குடும்பன்" எனறால், நண்பனை வெறுத்து ஒதுக்கிவிடுகின்றோமே? இதுதான் பாரதி காட்டிய வழியா?

பாரதி காட்டிய இந்த நல்ல வழியிலிருந்து விலகிச் செல்பவரை, மிக மிக உணர்ச்சியுடன், சினத்துடன் தாக்குகின்றார். பாருங்கள், அவரது சொற்கள் எப்படித் தீப்பொறிகளாய்க் கிளம்பியிருக்கின்றன—என்பதை.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

என்று மிகத் துணிந்து கட்டளையிடுகின்றார். தீய சாதிபேதம் பேசும் மனிதர்களைக் "காரியுமிழ்" எனக் கர்ஜனை புரிகின்றார். "மோதி மிதித்துவிடு" எனப் படைத்தளபதிபோல் கட்டளையிடுகின்றார்.

இவர் இப்படிக் கூறுவது, நம் இயக்கத்தின் பயனாய் மலர்ந்து, மக்களிடையே பவனி வரும் பகுத்தறிவுக் காலமாகிய இன்றல்ல! பாரதியார் இவ்வாறெல்லாம் துணிந்து கூறிய காலம் நம் இயக்கம் தோன்றாத காலம். ஆம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன். என்னே அவரது துணிவு! என்னே அவரது சீர்திருத்தக் கோட்பாடு? வாழ்க பாரதியார் பெயர்!

வளர்க அவர் கொள்கை!

# ஜெர்மனியில் நம்மவர்கள்

—(கிளாஸ் கோஹ்லர்)—

எர்பர்ட்டிலிருந்து லீப்சிக் செல்லும் எக்ஸ்பிரஸ் வண்டியில் நாங்கள் அமர்ந்திருந்தோம். சன்னல் வழியாகச் சாலே நதிக்கரைகளிலுள்ள கண்கவர் மாளிகைகளைப் பார்க்க முடிகிறது. ஆனால் இன்று எங்கள் பெட்டியில் அமர்ந்திருந்தவர்கள் சூரிய ஒளி நிறைந்த இயற்கைக் காட்சிகளில் அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை. பக்கத்தில் எங்களுடன் அமர்ந்திருந்த வெளிநாட்டார் சிலரையே அவர்கள் அடிக்கடி கூர்ந்து கவனித்து வந்தனர். அவர்களுடைய சருமம் கருப்பாக இருந்தது "எகிப்தியர்கள் போலும்!" என்றார் ஒருவர். மற்றொருவர், "இல்லை இந்தோனேஷியர்களாக இருக்கவேண்டும்" என்றார். கடைசியில் எங்களில் ஒருவர் அந்தவெளிநாட்டுக்கோஷ்டியாருடன் எப்படியோ பேச ஆரம்பித்து விடுகிறார். பிறகு சம்பாஷணை மிகவும் சரளமாக ஓடுகிறது. அந்த வெளிநாட்டுக்காரர்கள் ஜெர்மென் மொழியில் எவ்வித கஷ்டமுமின்றி மிகவும் சரளமாகப் பேசினர்.

அவர்கள் இந்தியாவிலிருந்து வந்த நண்பர்கள். பம்பாய், கேரளம் சென்னை இம்மூன்று மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவரான இளைஞர் கோபாலன் மிகவும் உற்சாகமான பேர்வழி. அவர்தான் அக்கோஷ்டியின் பிரதான பேச்சாளராக விளங்கினார். அவர்களது தாயகம் பற்றியும், அவர்களைப்பற்றியும், ஜெர்மென் ஜனநாயகக் குடியரசைப்பற்றிய அவர்களது கருத்தைப் பற்றியும் கேட்ட பல கேள்விகளுக்கு அவர் விடாமல் பதில் சொல்லிக்கொண்டே போனார். அவரது தோழர்கள் இது விஷயத்தில் அவருக்கு அடிக்கடி உதவினர். திரு. கோபாலன் தானும் தனது நண்பர்களும் எங்கள் குடியரசில் தங்கியிருப்பது பற்றிய விபரங்களைக் கூறினார்.

இந்தியாவில் அவர்கள் கல்லூரி விரிவுரையாளர்களாகவும், பேராசிரியர்களாகவும் பணியாற்றியவர்கள். 1957—1958 டிசம்பர், ஜனவரி மாதங்களில் மேல் பட்டப் படிப்பிற்காக இந்தியாவிலிருந்து நமது குடியரசிற்கு வந்த முதல் கோஷ்டியைத் தொடர்ந்து மார்ச்சு மாதத்தில் இவர்கள் இங்கு வந்தனர். விஞ்ஞானப் பயிற்சி பெறுவதற்காக அவர்கள் வந்துள்ளனர். "டாக்டர்" பட்டம் பெற்றபின் (இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு) அவர்கள் தமது தாய் நாட்டிற்குத் திரும்பிவிடுவர். அவர்கள் தமது பயிற்சிக்காகக் கிழக்கு ஜெர்மெனியைத் தேர்ந்தெடுத்ததேன் என்று கேட்கப்பட்டபோது, ஜெர்மென் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் உலகப் புகழ் வாய்ந்தவை என்று தயக்கமின்றிக் கூறினர். மேலும், எல்லா நாடுகளின் மாணவர்களுக்கும் ஜெர்மென் ஜனநாயகக் குடியரசு சிறந்த வாய்ப்புகளை அளிக்கின்றது என்றனர்.

## ஆச்சர்யம், ஆனால் உண்மை!

இந்திய நண்பர்களின் பிரமாத ஜெர்மென் மொழி ஞானம் எங்களுக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. கடினமான ஜெர்மென் மொழியை நமது இந்திய விருந்தினர்கள் இரண்டே மாதங்களுக்குள் எப்படிக்கற்றுக்கொண்டிருக்க முடியும்? "நிச்சயமாக நீங்கள் இந்தியாவிலேயே ஜெர்மென் மொழியை நன்றாகக் கற்றறிந்துகொண்டு இங்கு வந்திருக்கவேண்டும்" என்றார் எங்களில் ஒருவர். கோபாலன் "இல்லை" என்று தலையசைத்தார். இதுவரை எங்களுடைய சம்பாஷணையில் கலக்காது அமர்ந்திருந்த இரு ஜெர்மென் விரிவுரையாளர்களை அவர் சிரித்தவாறே சுட்டிக் காட்டி" இவர்களுடைய உதவியினால்தான் இவ்வளவு சடுதியில் நாங்கள் ஜெர்மென் மொழியை நன்றாகப் படித்துக்கொள்ளமுடிந்தது" என்றார். ஆனால் அந்த இருவரும் இதற்குக் காரணம் தாம் அல்ல என்றும், தமது மாணாக்கர்களின் ஊக்கமும் உற்சாகமுமே அவர்களுக்கு இவ்வளவு நல்ல மொழி ஞானத்தைப் பெற்றுத் தந்துள்ளன என்றும் கூறினர்.

எங்களுடைய இந்திய நண்பர்கள் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? முதலில் அவர்கள் லீப்சிக்கிலுள்ள அயல்மொழிக் கழகத்திற்குச் சென்றனர். இங்குள்ள ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் வெளிநாட்டு விருந்தினர்களுக்கு ஜெர்மென் மொழியைக் கற்பிக்கின்றனர். இதன்றி ஜெர்மென் ஜனநாயகக் குடியரசின் சமுதாய வாழ்க்கை பற்றியும் விவரமாக விளக்குகின்றனர். மேலும் கிழக்கு ஜெர்மெனியில் அவர்கள் தங்கியிருக்கும் நாட்களை வசதியாகவும் இனிய முறையிலும் கழிப்பதற்கான ஏற்பாடுகள் செய்கின்றனர். ஆனால் ஜெர்மென் மொழி வகுப்புகளுக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. வெளிநாட்டு விருந்தினர்கள் லீப்சிக்கில் தங்கியிருக்கும் காலம், ஒவ்வொரு தனி கோஷ்டியையும் பொறுத்துள்ளது. இந்தியர்களின் பட்டப்படிப்பிற்கென அவர்களின் சர்க்கார் ஓரளவு குறுகிய காலத்தையே ஒதுக்கியுள்ளதால், அவர்கள் லீப்சிக்கில் மற்றெல்லோரையும்விடக் குறைவான நாட்களுக்கே தங்குகின்றனர். வாரத்திற்கு 30 பாடங்கள் வீதம் சுமார் 3 மாத காலத்திற்குள் ஜெர்மென் மொழி பற்றிய அடிப்படையான ஞானத்தை அவர்கள் பெறுகின்றனர். இங்கு திரு. ஹஜிலா எங்களுடைய சம்பாஷணையில் குறுக்கிட்டு, சிறந்த போதனை முறைகளும், உங்களு

டைய ஆசிரியர்களின் செழுமையான முதிர்ச்சியும் அனுபவமும் தான் இவ்வளவு குறுகிய காலப் பயிற்சியைச் சாத்தியமாக்குகின்றன என்ருர்.

பிறகு கோபாலன் தனது பேச்சை மீண்டும் தொடங்கினுர். லீப்சிக் கழகத்தில் அவர்கள் எம்முறையில் பயிற்சி பெறுகின்றனர் என்பதை அவர் விவரித்தார். முதலில் எல்லா ஆசிரியர்களும் வெளி நாட்டு விருந்தினர்களே, லீப்சிக்கிலுள்ள பொருட்காட்சிச் சாலேகளுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் இதர பல கட்டிடங்களுக்கும் அழைத்துச் சென்று, அவற்றின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுகின்றனர். அவர்கள்யாவரும்ஒன்ருகச்சேர்ந்து நாடகங்கள், ஒபேரா நாடகங்கள் முதலியவற்றைக் காண்கின்றனர். இதன்றி வட்டமேஜைப் பேச்சுகளின் மூலம், எங்கள் குடியரசு பற்றிய அரசியல், பொருளாதார, கலாச்சாரப் பிரச்னைகள் பற்றிய எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்கப்படுகிறது. ஒரு சில வாரங்களானதும், இதர நகரங்களுக்கு எல்லோரும் கூட்டாக உல்லாசப் பிரயாணம் செய்வர். இவ்வாறு ஹாலே, மர்சேபர்க் முதலிய இடங்களுக்கு நமது இந்திய நண்பர்கள் சென்றிருந்தனர்.

பேராசிரியர் கனீயும் திரு. ஹரிஹரும் தமது டிரெஸ்டென் விஜயம் பற்றிக் கூறினர். திரு. செங்கோடன், மர்சேபர்க்கிற்கும் சென்றிருந்தாரம். தற்பொழுது நமது இந்திய நண்பர்கள் கோதேயும், ஷிச்சிலரும் வாழ்ந்த வைமார் நகருக்குச் சென்றுகொண்டிருந்தார். வைமார் நகரின் புகழ் இந்தியாவிலும் பரவியுள்ளது என்ருர் திரு. செங்கோடன்.

## உணவும் தட்பவெப்ப நிலேயும்

முற்றிலும் மாறுபட்ட கிழக்கு ஜெர்மன் சூழ்நிலேயில் இந்திய நண்பர்கள் மிகவும் சிரமப்படுகிருர்களா என்று ஒரு ஜெர்மென் பிரயாணி அவர்களேக் கேட்டார். நம் நாட்டு சூழ்நிலேக்கு ஒத்துப்போவது திரு. கோபலனுக்கு மிகவும் கடினமாக இருந்ததாம். முதலில் பெரும் பிரச்னையாக இருந்தது, உணவுப் பிரச்னையாம். ஆனுல் காண்டீன் ஊழியர்கள் இந்திய விருந்தினர்களின் தேவைகளேயும் விருப்பத்தையும்பூர்த்திசெய்யப்பெருமுயற்சி செய்து வருகின்றனராம். ஆசிய, அராபிய, இந்திய, ஐரோப்பிய, மாணவர்களுக்கு வெவ்வேறு உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. குளிர் காலத்தில் அளிக்கப்பட்ட மிகவும் குறைவான காய்கறிகள் இந்திய விருந்தினர்களுக்குப் [illegible]தவில்லேயாம். இறைச்சியை [illegible]க் கூடுதலாகக் காய்கறிகளேப் புசிப்பது அவர்களது நாட்டு வழக்கம். எனவே ஜெர்மன் சமையல் காரர்கள் சத்துள்ள நானுவிதமான உணவுப் பண்டங்களேத் தயாரித்துக் கொடுத்தனர், இந்திய நண்பர்களுக்கென்று பிரத்யேகமாக. இதனுல் இந்திய விருந்தினர்களுக்கு ஜெர்மென் சமையல் முறை ஒத்துப்போய்விட்டதாம்.

அந்நியர்களுக்கு மத்திய ஐரோப்பிய தட்பவெப்ப நிலேயுடன் ஒத்துப்போவது சுலுவான காரியமல்ல. நமது இந்திய நண்பர்கள் லீப்சிக்கில் வந்திறங்கியபோது ஓரளவு கடுமையான குளிர் காலம் என்றுதான் சொல்ல வேண்டும். எனவே, ஜெர்மென் ஜனநாயகக் குடியரசு சர்க்கார் இந்திய விருந்தினர்களுக்கென விசேஷமாகக் கம்பளி ஆடைகளேத் தயாரித்து, வழங்கியது. மேலும் ஒரு டாக்டரும் நர்சும் அவர்களின் உடலாரோக்கியத்தைக் கவனிப்பதற்கெனப் பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டனர்.

அந்த இரயில் பெட்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஜெர்மென் பிரயாணிகள், இந்திய நண்பர்களிடம் மேலும் பல கேள்விகளேக் கேட்டனர். இந்திய நண்பர்களுக்கு எவ்வளவு உபகாரச் சம்பளம் கிடைக்கிறது என்று ஒருவர் கேட்டார். மர்தம் ஒன்றுக்கு 450 டி-மார்க்குகள் கிடைக்கின்றன என்ருர், திரு. செங்கோடன். இத்தொகை மிகவும் 'தாராள'மான மானியமாகும் என்ருர் அவர். தானும் தனது நண்பர்கள் யாவரும் இதற்குள்ளாகவே தபால் ஆபீஸ் சேமிப்புப் பாங்கில் ஏராளமான பணத்தைப் போட்டு வைத்துள்ளதாக அவர் கூறினுர். ஆகஸ்டில் அவர் உல்லாசப் பிரயாணியாக மாஸ்கோவிற்கும் லெனின்கிராடிற்கும் செல்லப்போவதாகவும், அப்போது தாம் சேர்த்து வைத்துள்ள பணம் பயனுள்ள முறையில் செலவாகிவிடும் என்றும் அவர் கூறினுர். இதற்குள் வைமார் நகரின் ஸ்டேஷனை அடைந்துவிட்டது இரயில்வண்டி. இன்னும் அவர்களிடம் பேசுவதற்கு எவ்வளவோ இருந்தது. லீப்சிக்கில் தன்னே வந்து பார்க்குமாறு திரு. கோபாலன் எங்களே அழைத்தார். அங்கு அவர் மாணவர் ஹாஸ்டலில், நவீன வசதிகள் யாவும் உள்ள மிகவும் வசதியான தனி அறையில் வசித்து வருகிருர். அங்கே வந்தால் மேலும் பல விஷயங்களேப்பற்றிப் பேசுவதற்கு அவகாசம் இருக்கும் என்ருர். "வாருங்கள், இந்தியாவைப் பற்றியும் நாம் பேசலாம்" என்ருர் அவர்.

★

### நன்கொடை வரவு

"திராவிட நாடு" வளர்ச்சிக்காக, வ. ஆ. திருப்பத்தூர்த் தோழர்கள் சஞ்சீவி ரூபா 2–00, சந்திரன் ரூபா 3—00, தோழியர் கௌரி அம்மாள் ரூபா 3—00, இராமசாமி ரூபா 1—00-ம் நன்றியறிதலுடன் பெற்றுக் கொண்டோம்.

ஆ--ர்.